بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6
வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

இதழ் 20
ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது
துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

07 ஷவ்வால் 1442 ஹிஜ்ரி கமரி 20 ஹிஜ்ரத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 20 மே 2021

## அல்லாஹ்வின் கட்டளை

وَعَدَ اللّٰہُ الَّذِیۡنَ اٰمَنُوۡا وَعَمِلُوا الصّٰلِحٰتِ ۙ لَہُمۡ مَّغۡفِرَۃٌ وَّاَجۡرٌ عَظِیۡمٌ

நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கிறவர்களுக்கு, மன்னிப்பும், மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நாம் மீண்டும் மீண்டும் பிரசுரம் கொடுக்கின்றோம். மேலும் மக்களை சோதித்துப் பார்க்க அழைக்கின்றோம். நாம் சுயமே கண்ட அந்த இறைவனின் பக்கம் மக்களை வழிநடத்த வேண்டும் என்பதைத் தவிர்த்து இதில் எமக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### அல்லாஹ்வின் நிலை மறைவில் இருப்பதன் நுட்பமான ஞானம்

இறைவன் தன்னை வெளிப்படையில் ஒரு மறைவான நிலையில் வைத்துள்ளான். இதன் நுட்பத்தையும் இரகசியத்தையும் என்னைப் பொருத்தவரை சிலையை வடிக்கக் கூடியவர்கள் புரியவில்லை. இறைவன் திரை மறைவில் இருப்பதால் தான் மனிதனுக்கு அனைத்து தேடுதல்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கான வழிமுறைகள் திறக்கப்படுகின்றன. எந்த அளவிற்கு ஞானமும், நுட்பமான அறிவும் மனிதன் மீது தற்போது திறக்கப்பட்டுள்ளனவோ அவை அனைத்தும் ஒரு நேரத்தில் மறைவாக இருந்தன. மனித முயற்சியும், உழைப்பின் ஆற்றலும் தனது வெளிச்சத்தை வெளிப்படுத்தியுள்ளன. ஒரு வகையில் எல்லா நோக்கத்தையும் மனிதன் அடைந்துள்ளான். தனது நேசத்திற்குரியவர் பிரிந்து இருப்பதும், கண்களிலிருந்து வெளிப்படையில் தொலைவில் இருப்பதும் தனது அன்பர் மீதான நேசத்தில் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை. இன்னும் கூறப்போனால், அவர் வெளிப்படையான அந்த பிரிவால் தன்னுள் ஒரு வகையான வேதனையை ஏற்படுத்திக் கொண்டு அந்த அன்பிலும் நேசத்திலும் மேலும் முன்னேற்றம் காண்கின்றார். இது ஓர் உண்மையான நேசரின் நிலையாகும்.

இதேபோன்று சிலையை எடுத்துக் கொண்டு இறைவனை தேடக்கூடிய நபரால் எங்கனம் உண்மையான நேசத்திற்கான வாதத்தைச் செய்ய முடியும்? ஏனென்றால் அந்த சிலையை தவிர்த்து அவரது கவனம் முழுமையான முறையில் அந்த தூய முழுமையான அழகைக் கொண்ட இறைவனின் பக்கம் செல்வது கிடையாது. மனிதன் தனது நேசத்தை சுயமே பரிசோதித்துப் பார்க்க வேண்டும். அந்த வேதனையுடைய நேசரைப் போன்று நடக்கும்போதும், சுற்றும்போதும், அமரும்போதும், எழும்போதும் சுருக்கமாக விழிப்புடன் இருக்கும்போதும் அல்லது தூக்கத்தின்போதும் எல்லா நிலையிலும் தனது அன்பிற்குரியவனின் முகமே அவருக்கு தென்பட வேண்டும். முழுமையான கவனம் அவன் மீதே இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தனக்கு இறைவனுடன் ஓர் அன்பு உள்ளது. நிச்சயமாக உறுதியாக இறைவனின் மீது அன்பும், நேசமும் தன்னிடத்தில் உள்ளது என்று அவர் புரிந்து கொள்ளட்டும்.

ஆயினும், ஒரு வேளை இடைப்பட்ட விவகாரங்களும், அந்நிய உறவுகளும் தடைகளும் அவரது கவனத்தை அகற்றி விடுகின்றன என்றால் மேலும் ஒரு நொடிப்பொழுது கூட அந்த இறைவன் அவரது உள்ளத்திலிருந்து வெளியேறி விடுகின்றான் என்றால் பின்னர் நான் மெய்யாகவே கூறுகின்றேன். அந்த நபர் இறைவனின் நேசர் அல்ல. அவரிடம் இறைவன் அன்பு கொள்ளவில்லை.

எனவே உண்மையான இறைநேசர்களுக்கு கிடைக்கின்ற ஒளியும், வெளிச்சமும் அவருக்கு கிடைப்பதில்லை. இந்த அந்தஸ்து எப்படிப்பட்டது என்றால் இந்த இடத்தில் பெரும்பாலான மக்கள் தடுமாறி விடுகின்றனர். மேலும் இறைவனை நிராகரித்து விடுகின்றனர். அறிவிலிகள் தனது நேசத்தை சோதித்துப் பார்ப்பதில்லை. இறைவனைப் பார்க்காமலேயே இறைவன் மீது தப்பெண்ணம் கொண்டு விடுகின்றனர். எனவே என்னைப் பொருத்தவரை இறைவன் மறைவாக இருப்பது மனிதனின் நற்பாக்கியத்திற்காகவும், நேர்வழி மற்றும் முன்னேற்றம் வழங்குவதற்காகவும் அவனது ஆன்மீக ஆற்றல்களை சுத்தம் செய்து ஒளியூட்டுவதற்காகவும் அமைந்துள்ளது. ஏனென்றால் அந்த ஒளி அவனிடத்தில் ஊடுருவி விடுகின்றது. நாம் மீண்டும் மீண்டும் விளம்பரம் செய்கின்றோம். மக்களை சோதித்துப் பார்க்க அழைக்கின்றோம். சிலர் எம்மை வியாபாரி என்று கூறுகின்றர். வேறு சிலர் வேறொன்றை கூறுகின்றனர்.

சுருக்கமாக இந்தக் குற்றச்சாட்டுகளை செவிமடுத்துக் கொண்டு உலகின் ஒவ்வொரு நாட்டிலும் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் வசிப்பவர்களுக்கும் நாம் அறிவிப்புச் செய்கின்றோம். இதன் நோக்கம் என்ன?

### எமது நோக்கம்

நாம் சுயமே கண்ட அந்த இறைவனின் பக்கம் மக்களை வழிநடத்த வேண்டும் என்பதைத் தவிர இதில் எமக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை. கேள்விப்பட்ட விஷயங்கள் மற்றும் கதைகளின் வடிவில் நாம் இறைவனை எடுத்துரைக்க விரும்பவில்லை. மாறாக நாம் எமது சொந்த இருப்பை வாழ்க்கையை எடுத்து வைத்து உலகை இறைவனின் இருப்பை ஏற்கச் செய்ய விரும்புகின்றோம். இது ஒரு தெளிவான விஷயமாகும். இறைவனை நோக்கி ஒருவர் எந்த அளவுக்கு அடியெடுத்து வைப்பாரோ இறைவன் அவரை நோக்கி அதை விட வேகமாகவும், துரிதமாகவும் அவர் பக்கம் வருகின்றான். உலகில் நாம் பார்க்கின்றோம். ஒரு கண்ணியத்திற்குரிய நபரின் அன்பைப் பெற்ற ஒருவர் கண்ணியத்திற்குரியவராக கருதப்படுகின்றார். அவ்வாறிருக்க இறைவனின் நெருக்கத்தை பெறக்கூடியவர் இறைவனின் வல்லமைகள் மற்றும் எல்லையற்ற ஆற்றல்களின் உதாரணங்களை தன்னுள் சிறிதளவாவது அடையாளமாக கொண்டிருக்க மாட்டாரா என்ன?

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 291 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் துஆக்களின் முக்கியத்துவம், அது ஒப்புக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் துஆவின் தத்துவம்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 16 ஏப்ரல் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **16 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ -

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ○ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ؕ فَمَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ وَعَلَى الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍ ؕ فَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَهُوَ خَيْرٌ لَّهٗ ؕ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ○ شَهْرُ رَمَضَانَ الَّذِيْۤ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ۚ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ ؕ وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ ۫ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ○ وَاِذَا سَاَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَاِنِّيْ قَرِيْبٌ ؕ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلْيَسْتَجِيْبُوْا لِيْ وَلْيُؤْمِنُوْا بِيْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ ○

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுடையவர் ஆகலாம். (எனவே) கணிக்கப்பட்ட நாள்களில் (நோன்பு நோற்றுக் கொள்க). உங்களுள் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விடுபட்ட நோன்பினை) மற்ற நாள்களில் நோற்க வேண்டும். இதற்குரிய ஆற்றலைப் பெறாதவர்கள் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது கடமை ஆகும். ஒருவர் முழுமையாகக் கட்டுப்பட்டு ஒரு நற்செயல் செய்வார் எனில், அது அவருக்கு நன்றே. நீங்கள் அறிவுடையவர் என்றால், நோன்பு நோற்பது உங்களுக்குச் சிறந்தது.

ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பெற்ற மாதமாகும். குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக்கூடியதும், நேர்வழியைத் தெளிவாக்கக்கூடியதும் (நன்மை தீமையை) பிறித்தறியக்கூடியதும் ஆகும். எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நேயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விட்டுப் போன நோன்பை) மற்ற நாள்களில் கணக்கிட்டு (நோற்கவும்). அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகிறான். உங்களுக்குக் கடினத்தை (த்தர) விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காகவும் நீங்கள் அவனைப் பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்).

(தூதரே) என்னடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கிறேன்; பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக). (2:184–187)

அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் ரமலான் மாதத்தை கடப்பதற்கான சந்தர்ப்பம் நமக்கு மீண்டும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நாம் எப்போதும் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ரமலான் மாதத்தை அடைவதும், அதை கடப்பதும் மட்டுமே போதுமானதல்ல. அல்லது காலையில் சஹரி உண்டு விட்டு நோன்பு நோற்று, மாலையில் இஃப்தாரி செய்து நோன்பை திறப்பது மட்டும் நோன்புகளின் நோக்கத்தை முழுமை செய்வது கிடையாது. மாறாக, இந்த நோன்புகளுடன் நம்மிடத்தில் தூய மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு அல்லாஹ் நமக்கு கட்டளை வழங்கியுள்ளான். நோன்புகளின் அடிப்படையில் அல்லாஹ் நமக்கு சில கட்டளைகளை வழங்கியுள்ளான். அதன் விளைவாக மற்றும் அதன்படி அமல் செய்வதன் காரணமாக தனது நெருக்கத்தை நமக்கு வழங்குவதாகவும், துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கும் அல்லாஹ் நற்செய்தி வழங்கியுள்ளான்.

அவற்றில் சில வசனங்களை நான் ஓதியுள்ளேன். நான் ஓதிய அந்த வசனங்களில் நோன்பின் கடமைகளின் பக்கம் அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளான். மேலும் ஒருவர் நோயாளியாக இருந்தால் அல்லது வேறு ஏதாவது ஆகுமான காரணம் இருக்குமென்றால் நோன்புகளிலிருந்து சலுகை வழங்கியுள்ளான். மேலும் அந்த விடுபட்ட நோன்புகளை பின்னர் முழுமை செய்து கொள்ள வேண்டும் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான். அல்லது ஒருவர் முற்றிலும் அந்த நோன்புகளை முழுமை செய்ய முடியாதென்றால் ஏதாவது நீண்ட நோய் இருக்குமென்றால் ஃபித்யா வழங்கும்படியும் கூறியுள்ளான். ஆயினும் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். பின்னர் நோன்பு நோற்பதற்கு ஆற்றல் கிடைத்து விட்டாலும் பொருளாதார ரீதியில் ஒருவருக்கு அதற்கு ஆற்றல் இருக்குமென்றால் ஃபித்யா கொடுப்பது சிறந்ததாகும்.

பின்னர் திருக்குர்ஆனின் முக்கியத்துவம் மற்றும் அதன் இறங்குதல் தொடர்பாக எடுத்துரைத்தவாறு கூறுகின்றான். அதாவது அதனை ஓதுவதும், அதன்படி செயல்படுவதும் நமக்கு நேர்வழி மற்றும் ஈமானில் உறுதி பெறுவதற்கான வழிமுறையாகும். இறைவனுடன் தொடர்பை நிலைநாட்டுவதற்கும், அவனால் அனுப்பப்பட்ட போதனைகளை புரிவதற்கும் அது வழிமுறையாகும். மேலும் நபியே! நான் அவர்களுக்கு அருகில் உள்ளேன். துஆக்களை செவிமடுக்கின்றேன். ஒப்புக் கொள்கின்றேன் என்று தனது அடியார்களுக்கு கூறும்படி இறைவன் நமக்கு நற்செய்தியும் வழங்கியுள்ளான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ரமலான் மாதத்தில் அல்லாஹ் கீழ் வானத்திற்கு இறங்கி வந்து விடுகின்றான். அதாவது அல்லாஹ் தனது அடியார்களின் துஆக்களை மிக அதிகமாக கேட்கின்றான்.

ஆயினும் அல்லாஹ் கூறுகின்றான்: உங்களது துஆக்களை நான் கேட்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் பின்னர் நீங்களும் எனது கூற்றுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். நான் வழங்கிய கட்டளைகளின்படி அமல் செய்ய வேண்டும். வெறும் ரமலான் மாதத்தில் மட்டும் செய்தால் போதாது. மாறாக, அந்த நன்மைகளை நிரந்தரமாக வாழ்க்கையின் அங்கமாக்கிக் கொள்ள வேண்டும். மேலும் தனது ஈமானை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். எனவே துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கும் சில நிபந்தனைகள் உள்ளன. ஆக நாம் இந்த நிபந்தனைகளுக்கேற்ப நமது துஆக்களில் அழகை ஏற்படுத்திக் கொண்டால் அந்நிலையில் அல்லாஹ்வை நமக்கு அருகில் இருப்பவனாகவும், நமது துஆக்களை கேட்கக் கூடியவனாகவும் நாம் காண்போம்.

தற்போது நான் துஆ தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை முன் வைக்க விரும்புகின்றேன். துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு சில நிபந்தனைகள் உள்ளன. அது தொடர்பாக நாம் நமது செயல் நிலைகளை சரி செய்து கொள்ள வேண்டும். இது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய விஷயங்களையும், துஆவின் முக்கியத்துவம், அதன் தத்துவம் மற்றும் அதன் ஆழம் ஆகியவற்றைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியவற்றுள் சிலவற்றை நான் எடுத்துரைப்பேன். பெரும்பாலான மக்கள் எப்படிப்பட்டவர்களாக உள்ளனர் என்றால் அவர்கள் மேலோட்டமாக துஆ செய்து விட்டு அல்லாஹ் எங்களது துஆக்களை ஒப்புக் கொள்ளவில்லை என்று கூறி விடுகின்றனர். அல்லாஹ்விடம் நாம் ஒரு பணியை சொன்னோம். அதை அவன் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்ற ரீதியில் அவர்கள் கூறுகின்றனர். அதாவது நவூதுபில்லாஹ் அல்லாஹ் அந்த கட்டளைகளுக்கு கட்டுப்பட்டவனாக இருக்கின்றான் என்று கருதுகின்றனர். அவர்கள் என்ன விரும்புவார்களோ அதை அவர்கள் கூறுவார்கள். அவர்கள் எப்படி விரும்புவார்களோ கூறுவார்கள். அவர்களுடைய செயல் நிலை எப்படி இருந்தாலும் அவர்களது துஆக்களை அல்லாஹ் கேட்க வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். அல்லாஹ் அவ்வாறு நடக்காது என்று தெளிவாக கூறி விட்டான்.

முதலில் நீங்கள் எனது கூற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப உங்களது செயல்களை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறி விட்டான். ரமலான் மாதத்தில் நன்மைகளுக்கான சூழல் உருவாகியுள்ளது. தர்ஸுகளுக்கான தொடரும் ஆரம்பமாகி உள்ளது. எனவே எனது வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகளை பார்க்க வேண்டும். சிந்திக்க வேண்டும். அதை செவிமடுத்து அதன்படி செயல்பட வேண்டும். தனது ஈமான் எந்த அளவிற்கு உறுதியாக உள்ளது என்று ஆய்வு செய்ய வேண்டும். ஒரு கஷ்டம் வரும்போதோ, சோதகைள் வரும்போதோ ஈமான் தடுமாற்றத்திற்கு உள்ளாகி விடுகின்றதா என்றும் ஆய்வு செய்ய வேண்டும். எவ்வாறிருப்பினும் இது எப்படிப்பட்ட ஒரு கட்டுரை என்றால் அதில் மனிதன் தான் முதல் அடியை எடுத்து வைக்க வேண்டும். அதன் உச்சத்தை அடைந்து விடும்போது பின்னர் அல்லாஹ்வின் கருணையும், பரிவும் பொங்கி எழுந்து விடும். அவனது அருளும் வெளிப்பட்டு விடும். எனவே இந்த விஷயத்தை புரிவது நமக்கு மிகவும் அவசியமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: துஆ என்பது இஸ்லாத்திற்கு மட்டுமே உள்ள சிறப்பான பெருமிதமாகும். முஸ்லிம்கள் இதன் மீது பெருமை கொள்கின்றனர். ஆனால் நினைவில் கொள்ள வேண்டும். துஆ என்பது வெறும் வாய் பேச்சுக்களின் பெயர் அல்ல. மாறாக, அது எப்படிப்பட்ட விஷயம் என்றால் உள்ளம் இறைவனின் அச்சத்தால் நிறைந்து விடுகின்றது. துஆ செய்யக் கூடியவரின் ஆன்மா தண்ணீரைப் போன்று பாய்ந்து இறைவனின் சன்னிதானத்தில் வீழ்ந்து விடுகிறது. மேலும் தனது பலவீனங்கள் மற்றும் தடுமாற்றங்களை அகற்றுவதற்கு வலிமையும், வல்லமையும் வாய்ந்த இறைவனிடம் ஆற்றலையும், பாவ மன்னிப்பையும் அந்த ஆன்மா வேண்டுகின்றது.

இது எப்படிப்பட்ட நிலை என்றால் அதனை வேறொரு சொற்களில் மரணம் என்று கூற முடியும். இந்த நிலை ஏற்பட்டு விட்டால் துஆ ஒப்புக் கொள்வதற்கான வாசல் திறந்து விடும் என்று உறுதியாக நம்புங்கள். மேலும் தீமையிலிருந்து தப்பிப்பதற்கு சிறப்பான ஆற்றலும், அருளும், உறுதிப்பாடும் வழங்கப்படுகின்றது. மேலும் நன்மைகளில் நிலைநிற்பதற்கும் ஆற்றல் வழங்கப்படுகின்றது. இந்த வழிமுறை எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த வழிமுறையாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 263 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

இதுவே துஆ செய்வதற்கான வழிமுறையாகும். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கும், பாவங்களிலிருந்து தூய்மை பெறுவதற்கும் இதுவே மிகச்சிறந்த வழிமுறையாகும். எங்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன. அல்லாஹ் எங்கள் மீது திருப்தி கொண்டுள்ளான் என்பது எங்களுக்கு எப்படி தெரிய வரும் என்று இன்றைய நாட்களில் மிக அதிகமாக கேள்வி கேட்கப்படுகின்றன. இங்கு இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓர் அடிப்படையான வழிமுறை ஒன்றை கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்விடத்தில் உண்மையான தொடர்பு ஏற்பட்டு விட்டால் அதாவது நிரந்தரமான தொடர்பு ஏற்பட்டு விட்டால் அந்நிலையில் தீமைகளிலிருந்து தப்பிப்பதற்கான உறுதிப்பாடு கிடைக்கின்ற வகையில் அல்லாஹ் அருள் செய்து விடுவான். அந்நிலையில் மனிதன் தீமையிலிருந்து தப்பிப்பது மட்டுமல்ல. மாறாக, நன்மைகளை செய்வதற்கும் அதில் நிலைநிற்பதற்கும் ஆற்றல் வழங்கப்படுகின்றது. இந்த நிலை ஏற்படவில்லை என்றால் நான் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்று விட்டேன் என்று மனிதனால் கூற முடியாது. எனவே இந்த தரத்தில் சிந்திக்கக்கூடியவரும், அதற்கேற்ப அமல் செய்யக்கூடியவரும் தான் உண்மையான இறையடியாராக ஆக முடியும். இதற்கேற்ப ரமலான் மாதத்தில் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

நான் கூறியதுபோன்று துஆ தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில கூற்றுகளை உங்கள் முன்னால் எடுத்துரைப்பேன். துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவது தொடர்பான விவகாரத்தை எடுத்துரைத்தவாறு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

துஆ ஒப்புக் கொள்ளப்படுவது என்ற விவகாரம் உள்ளபடியே துஆ எனும் (அசல்) விவகாரத்தின் ஒரு கிளையாகும். அசல் விஷயத்தை புரியாத நபருக்கு அதன் கிளைகளை புரிவதிலும் கஷ்டங்கள் ஏற்படும். மேலும் அவருக்கு அதில் ஏமாற்றம் ஏற்படலாம். இது அடிப்படை சட்டமாகும். ஒரு விஷயத்தை புரிவதற்கு அதன் அடிப்படையை புரிவது அவசியமாகும். அடிப்படை விஷயமே அவருக்கு புரியவில்லை என்றால் எவ்வளவு விளக்கங்கள் மற்றும் கருத்துக்கள் கூறப்பட்டாலும் அவரால் அதனை புரிய முடியாது. ஒரு நல்லடியாருக்கும், அவரது இறைவனுக்கும் இடையில் கவர்ந்து இழுக்கப்படும் தொடர்பு உள்ளது.

இதுவே துஆவின் அடிப்படை ஆகும். அதாவது ஈர்ப்பு சக்தி கொண்ட ஒரு தொடர்பு உள்ளது. முதலில் இறைவனின் ரஹ்மானிய்யத் அடியாரை தன் பக்கம் ஈர்க்கின்றது. பின்னர் அடியாரின் உண்மையின் ஈர்ப்பின் காரணமாக இறைவன் அவருக்கு அருகில் வந்து விடுகின்றான். அடியார் உண்மையான உள்ளத்துடனும் உண்மையுடனும் முயற்சி செய்தால் பின்னர் இறைவன் அடியாரை நெருங்கி விடுகின்றான். துஆவின் நிலையில் அந்த தொடர்பு ஒரு சிறப்பான அந்தஸ்தை அடைந்து விநோதமான தன்மைகளை அடியாரிடத்தில் ஏற்படுத்துகின்றது. மிகவும் விநோதமான தன்மைகள் வெளிப்படுகின்றன.

எனவே அடியார் ஒரு கஷ்டத்தில் மூழ்கிவிடும்போது இறைவனின் பக்கம் அவர் முழுமையான நம்பிக்கையுடனும், முழுமையான அன்புடனும், முழுமையான தைரியத்துடனும் அவர் குனிந்து விடும்போது உயர் தரமான விழிப்புணர்வுடன் கவனக்குறைவு எனும் திரைகளை கிழித்தவாறு அர்ப்பணிப்பு எனும் மைதானத்தில் அவர் மேலும் மேலும் முன்னேறிச் சென்று விடுகின்றார். பின்னர் அங்கு அவர் பார்க்கின்ற காட்சி இறைவனின் சன்னிதானமாக இருக்கின்றது. அவர் அந்த இறைவனுக்கு எவரையும் இணையாக்க மாட்டார். அந்நிலையில் அந்த நபரின் ஆன்மா அந்த சன்னிதானத்தில் தனது தலையை வைத்து விடுகின்றது. அந்நிலையில் அவருக்கு இறைவன் மட்டுமே

தென்படுகின்றான். எல்லா விஷயங்களும் அவரது பார்வையிலிருந்து மறைந்து விடுகின்றன. உலகின் எந்த அந்தஸ்தும் அவருக்கு முன் தென்படுவதில்லை. எந்தவொரு விஷயத்தையும் அவர் பொருட்படுத்துவதில்லை. அந்நிலையில் அவருக்கு இறைவன் மட்டுமே தென்படுகின்றான். மேலும் அவர் இறைவனை பார்க்கின்றார்.

அப்போது இறைவனின் சன்னிதானத்தில் அவரது ஆன்மா தலை வைத்து விடுகின்றது. அவருள் வைக்கப்பட்ட அந்த ஈர்ப்பு சக்தியானது இறைவனது அருட்கொடைகளை தன் பக்கம் ஈர்க்கின்றது. அப்போது கம்பீரமிக்க இறைவன் அந்த பணி முழுமை பெறுவதன் பக்கம் கவனம் செலுத்துகின்றான். மேலும் அந்த துஆவின் தாக்கம் அந்த பணியை முழுமை செய்வதற்கு தேவையான அனைத்து காரணிகளின் மீதும் ஏற்படுகின்றது. அதாவது அந்த பணிக்கு என்னென்ன விஷயங்கள் தேவையோ மற்றும் அவசியமோ அவை அனைத்தின் மீதும் அல்லாஹ் தனது தாக்கத்தை ஏற்படுத்துகின்றான். அதன் மூலம் அந்த நோக்கத்தை பெறுவதற்கு அவசியமான காரணிகள் உருவாகி விடுகின்றன. உதாரணமாக, மழை வேண்டி துஆ செய்யப்பட்டிருந்தால் துஆ ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு மழைக்கு தேவையான இயற்கையான காரணிகள் அந்த துஆவின் தாக்கத்தால் உருவாக்கப்படுகின்றன. வறட்சிக்காக பத்துஆ (எதிர் மறையான துஆ) செய்யப்பட்டிருக்குமென்றால் பின்னர் வல்லமைமிக்க இறைவன் எதிர் மறையான காரணிகளை உருவாக்கி விடுகின்றான்.

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நபிமார்களிடமிருந்து எந்த அளவுக்கு ஆயிரக்கணக்கான அற்புதங்கள் வெளிப்பட்டுள்ளனவோ அல்லது இறை நேசர்கள் இதுவரை எந்த அளவிற்கு அற்புதங்களை காட்டியுள்ளார்களோ அதன் அசல் ஊற்று என்பது இந்த துஆவே ஆகும். பெரும்பாலானவர்கள் துஆக்களின் தாக்கத்தின் மூலமாகவே பலதரப்பட்ட அசாதாரணமான இறை வல்லமையின் காட்சிகளை அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள்.

(பரகாத்துத் துஆ, ரூஹானீ கஸாயின் தொகுதி 6 பக்கம் 9,10)

திருக்குர்ஆன் எண்ணற்ற முன்னறிவிப்புகளால் நிறைந்துள்ளது. அதுமட்டுமின்றி நாம் பார்க்கின்றோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலும் ஏராளமான முன்னறிவிப்புகள் நிறைவடைந்துள்ளன. ஏராளமான விஷயங்கள் முழுமையாகி உள்ளன. ஏராளமான நன்மக்களுக்கு நல்ல கனவுகள் வந்துள்ளன. மேலும் முழுமையாகி உள்ளன. துஆக்களின் தாக்கம் வெளிப்படுகின்றன. ஆக கலப்பற்ற தன்மையை மேற்கொண்டு அடியார் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் குனிகின்றபோது இந்த அனைத்து விஷயங்களும் நடைபெறுகின்றன.

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

அதாவது எவர் எமது வழியில் கடும் முயற்சி செய்வாரோ நாம் அவருக்கு எமது வழிகளை திறந்து கொடுப்போம் (29:70)

முயற்சி என்பது முதலில் அடியார் மீது சுமத்தப்பட்டுள்ளது. நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். இது வாக்குறுதியாகும். மேலும் மற்றொரு பக்கம் اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்று அல்லாஹ் துஆ செய்யும்படி கற்றுத் தந்துள்ளான். நீங்கள் முயற்சி செய்யுங்கள். நான் எனது வழிகளை உங்களுக்கு திறந்து கொடுப்பேன் என்று அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான்.

மற்றொரு பக்கம் اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ அதாவது எங்களுக்கு நேரான வழியை காட்டுவாயாக என்ற துஆவையும் கற்றுத் தந்து விட்டான். எனவே இதனை கருத்தில் கொண்டவாறு தொழுகையில் மனிதன் உருக்கத்துடன் துஆ செய்ய வேண்டும். மன்றாடி துஆக்கள் செய்ய வேண்டும். மேலும் முன்னேற்றம் மற்றும் அகப்பார்வையை பெற்று விட்ட மக்களைச் சார்ந்தவர்களாக நாமும் ஆகி விட வேண்டும் என்று மனிதன் ஆசை கொள்ள வேண்டும். மேலும் இவ்வுலகிலிருந்து அகப்பார்வை அற்றவனாகவும், குருடனாகவும் செல்லக் கூடாது என்ற எண்ணமும் மனிதனிடம் இருக்க வேண்டும். எனவே தான் அல்லாஹ் கூறுகின்றான்:

مَنْ كَانَ فِيْ هٰذِهٖٓ اَعْمٰى فَهُوَ فِي الْاٰخِرَةِ اَعْمٰى

எவர் இவ்வுலகில் பார்வையற்றவராக இருப்பாரோ அவர் மறு உலகிலும் பார்வையற்றவராக இருப்பார். (17:73)

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 20 – லண்டனில் அச்சிடப்பட்டது)

அதாவது ஆன்மீக ரீதியில் பார்வையற்றவர் ஆவார். எவர் இவ்வுலகில் உலகக் காரியங்களில் மூழ்கி இருப்பாரோ மேலும் இறைவனை அடையாளங்கண்டு கொள்ளவில்லையோ, துஆக்களின் நுட்பத்தை அறியாமல் இருக்கின்றாரோ மேலும் துஆக்களின் தாக்கத்தை கண்டறியாமல் இருக்கின்றாரோ பின்னர் அத்தகைய நபர் மறு உலகிலும் இறை நெருக்கத்தை பெற முடியாது.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மறுமைக்கான தயாரிப்பு என்பது இவ்வுலகிலிருந்தே செய்யப்பட வேண்டும். மறுமைக்காக ஆயத்தமாக வேண்டும். மறு உலகை காண்பதற்கு நாம் இவ்வுலகிலிருந்து கண்களை எடுத்துச் செல்ல வேண்டும். மறு உலகில் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்ற நிலையை நாம் காண வேண்டும் என்றால் பின்னர் இவ்வுலகிலிருந்தே அதனை காண்பதற்குரிய கண்களை எடுத்துச் செல்ல வேண்டும். மறு உலகை உணர்வதற்கு தேவையான புலன்கள் இவ்வுலகிலேயே கிடைக்கின்றன. எனவே அல்லாஹ் வாக்குறுதி செய்து விட்டு அவன் முழுமை செய்ய மாட்டான் என்று நம்மால் எண்ணம் கொள்ள முடியுமா?

அன்னார் கூறினார்கள்: ஆன்மீக ஞானம் மற்றும் ஆன்மீக இன்பத்திலிருந்து இழப்பிற்குரியவராக இருப்பதே இங்கு பார்வையற்றவர் என்பதன் பொருளாகும். ஒரு நபர் கண்மூடித்தனமாக ஒன்றை பின்பற்றுகின்றார். அதாவது ஒருவர் முஸ்லிம்களின் குடும்பத்தில் பிறந்து விட்டதன் காரணமாக கண்மூடித்தனமாக பின்பற்றுகின்றார். எனவே இதன் அடிப்படையில் அவருடைய ஈமான் கண்மூடித்தனமாக உள்ளது. மேலும் கண்மூடித்தனமாக அதனை பின்பற்றுகின்றார். செயல் எதுவும் இல்லை. முஸ்லிம்கள் குடும்பத்தில் பிறந்து விட்டார். எனவே நான் முஸ்லிம் ஆவேன் என்று (கூறி) வெறும் கண்மூடித்தனமாக பின்பற்றுகின்றார். அவர் முஸ்லிம் என்றும் அழைக்கப்படுகின்றார்.

மற்றொரு பக்கம் ஒருவர் கிறிஸ்துவ குடும்பத்தில் பிறந்து கிறிஸ்துவராகி விடுகின்றார். இதுபோன்ற நபர்களுக்கு இறைவன் மற்றும் தூதர் (ஸல்) மற்றும் திருக்குர்ஆனின் மீது எந்த கண்ணியமும் இல்லாமல் இருப்பதற்கு இதுவே காரணமாகும். அவருடைய மார்க்கத்தின் மீதான நேசமும் கூட ஆட்சேபனைக்குரியதாகும். எவர் கண்மூடித்தனமாக தனது மார்க்கத்தை பின்பற்றுகின்றாரோ அவரது மார்க்கத்தின் மீதான நேசமும் கூட ஆட்சேபனைக்குரியதாக உள்ளது. இறைவன் மற்றும் அவனது தூதரை இழிவுபடுத்தக் கூடியவர்களின் கூட்டத்தில் அவரும் இருக்கின்றார். அதற்கு காரணம் என்னவென்றால், அதுபோன்ற நபர்களுக்கு ஆன்மீக கண்கள் இருப்பதில்லை. அவரிடத்தில் மார்க்க நேசமும் இருப்பதில்லை. அன்பு இருக்குமென்றால் அன்பு செலுத்தக்கூடியவர் தனது நேசருக்கு எதிராக எதனையும் விரும்ப மாட்டார்.

சுருக்கமாக, நீங்கள் பெறுவதற்கு தயார் என்றால் நான் வழங்குவதற்கு தயாராக உள்ளேன் என்று அல்லாஹ் கற்றுக் கொடுத்துள்ளான். எனவே இந்த துஆவை செய்வதே இந்த நேர்வழியை பெறுவதற்குரிய தயாரிப்பு ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 20 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

எனவே இந்த நாட்களில் اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ அதாவது அல்லாஹ்வே! எங்களுக்கு நீ நேரான வழியை காட்டுவாயாக. உள்ளங்களையும் தூய்மைப்படுத்துவாயாக. உண்மையான இறைவணக்கம் செய்பவராக ஆக்குவாயாக. அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாக ஆக்குவாயாக என்ற இந்த துஆவை அதிகம் செய்ய வேண்டும்.

இன்றைய நாட்களில் தீவிரவாதிகள் விரும்புவதைப்போன்றும், அவர்களைப் போன்றும் ஆகி விடக்கூடாது என்றும் துஆ செய்ய வேண்டும். இறைவன் மற்றும் இறைவனின் தூதரின் பெயரில் அநீதியிழைத்துக் கொண்டு செல்கின்றனர். அல்லாஹ் அநீதியாளர்களின் தீங்கிலிருந்தும் ஒவ்வொருவரையும் பாதுகாப்பானாக. நாங்கள் எந்த அளவுக்கு பாவங்கள் செய்திருக்கின்றோம் என்றால் இனி இறைவன் எங்களை மன்னிக்க மாட்டான் என்று சில மக்கள் கூறுகின்றனர். எந்த அளவுக்கு பாவம் செய்தவர்கள் மன்னிக்கப்படுகின்றார்கள்? என்று சிலர் கேள்வியும் கேட்டு விடுகின்றனர். மேலும் நாங்கள் மன்னிக்கப்பட மாட்டோம் என்று கூறி மேலும் பாவங்களில் மூழ்கிக் கொண்டே செல்கின்றனர். அசல் விஷயம் என்னவென்றால் ஷய்த்தான் அவர்களின் உள்ளங்களில் சந்தேகங்களை ஏற்படுத்துகின்றான். இறைவனிடமிருந்து விலக்குவதற்காக ஷய்த்தான தனது ஆயுதத்தை பயன்படுத்துகின்றான். இதுபோன்ற மக்கள் பின்னர் ஷய்த்தானின் கைகளில் பொம்மைகளாகி விடுகின்றனர். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஷய்த்தானின் இந்த தாக்குதல்களிலிருந்து நாம் தப்பிப்பதற்கும் அதிலிருந்து வெளியேறுவதற்குமான வழிமுறைகளை எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்:

பாவம் செய்த நபர் தனது பாவங்களின் மிகுதியை எண்ணி துஆ செய்வதிலிருந்து விலகியிருக்கக்கூடாது. நிறைய பாவங்கள் செய்து விட்டோம் என்று எண்ணி ஒருபோதும் (தவ்பா செய்வதிலிருந்து) விலகக்கூடாது. துஆ விஷ முறிவு மருந்து ஆகும். துஆவின் மூலமாக பாவம் எவ்வளவு தீயதாக அவருக்கு தென்பட தொடங்கும் என்பதை அவர் கண்டு கொள்வார். துஆ மட்டுமே பாவங்களிலிருந்து தப்பிப்பதற்குரிய சிகிச்சையாகும். நிரந்தர மனப்பான்மையுடன் நீங்கள் துஆ செய்து வந்தால் பின்னர் பாவம் அவருக்கு தீயதாக தென்படுவதை (அவர்) கண்டு கொள்ளலாம். மேலும் ஷய்த்தானும் ஓடி விடுவான். எந்த மக்கள் பாவங்களில் மூழ்கி, துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதிலிருந்து நிராசையடைந்து இருக்கின்றார்களோ தவ்பா செய்வதன் பக்கம் முகம் திருப்புவதில்லையோ இறுதியில் அத்தகைய நபர்கள் நபிமார்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை நிராகரிக்கக்கூடியவர்களாக ஆகி விடுகின்றனர்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 4,5 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

பின்னர் அவர்கள் மார்க்கத்திலிருந்தும் விலகி விடுகின்றனர். அதுபோன்ற மக்கள் மார்க்கத்திலிருந்து தொலைவில் சென்று விடுகின்றனர். பின்னர் நபிமார்களிடமிருந்தும் விலகி இறுதியில் நாத்தீகத்தை அடைந்து விடுகின்றனர். எனவே அதுபோன்ற மக்களுக்கு இஸ்லாம் நம்பிக்கையூட்டுகின்றது. பாவங்களில் மூழ்கியிருந்த மக்களுக்கு நம்பிக்கையுடன் பாவங்களிலிருந்து எவ்வாறு தவ்பா செய்ய வேண்டும் என்பதற்கான சூழலை உருவாக்குவதற்காக அல்லாஹ் ஒவ்வொரு ஆண்டும் இந்த ரமலான் மாதத்தை காட்டுகின்றான். எனவே இந்த மாதத்திலிருந்து பயன் பெற வேண்டும். أُجِيبُ كُلَّ دُعَائِكَ (உமதுஅனைத்து துஆக்களையும் நான் ஒப்புக் கொள்கிறேன்) என்ற தனது ஓர் இல்ஹாமை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: أُجِيبُ كُلَّ دُعَائِكَ என்று என்னுடன் எனது கண்ணியத்திற்குரிய எஜமானன் தெளிவான வாக்குறுதி செய்துள்ளான். ஆயினும் குல்ல (அனைத்து துஆக்கள்) என்பதின் பொருளாக நான் புரிந்திருப்பது என்னவென்றால், எந்த துஆக்களை ஒப்புக் கொள்வதால் தீங்கு ஏற்படுமோ அந்த துஆக்கள் விதிவிலக்காகும். அனைத்து துஆ என்பதன் பொருள் எல்லா துஆக்களும் கேட்கப்படும் என்பதல்ல. ஆயினும் குல்ல என்பதன் பொருள் என்னவென்றால், எதனை கேட்காததால் தீங்கு ஏற்படுமோ அந்த துஆக்கள் ஆகும். ஆனால் அல்லாஹ் தர்பிய்யத் மற்றும் சீர்திருத்தத்தை விரும்புகின்றான் என்றால் அதனை மறுப்பதே துஆ ஒப்புக் கொள்ளப்படுதலாக அமைகின்றது.

சில நேரம் மனிதன் ஒரு துஆவில் தோல்வியடைகின்றான். இறைவன் எனது துஆவை மறுத்து விட்டான் என்று அவன் கருதுகின்றான். ஆனால் உள்ளபடியே அல்லாஹ் அவனது துஆவை ஒப்புக் கொண்டு விடுகின்றான். அவ்வாறு ஒப்புக் கொள்வது மறுப்பு என்ற வடிவில் வெளிப்படுகின்றது. ஏனென்றால் திரை மறைவில் அதனை மறுப்பதிலேயே அந்த நபரின் நன்மையும், பயனும் அமைந்திருக்கின்றது. மனிதன் குறைமதி கொண்டவனாக இருக்கின்றான். அவனிடத்தில் தொலைநோக்கு பார்வை இருப்பதில்லை. மாறாக வெளிப்படை வணங்கியாக இருக்கின்றான். அல்லாஹ்விடத்தில் ஒருவர் துஆ செய்து வெளிப்படையில் அவருடைய நன்மைக்கேற்ப விளைவு அமையவில்லை என்றால் இறைவன் எனது துஆவை கேட்கவில்லை என்று இறைவன் மீது தப்பெண்ணம் கொள்ளக்கூடாது. இதுவே மனிதனுக்கு உகந்ததாகும். இறைவன் அனைவரது துஆக்களையும் கேட்கின்றான். اُدۡعُوۡنِیۡۤ اَسۡتَجِبۡ لَکُمۡ (என்னிடம் வேண்டுங்கள்; நான் உங்கள் வேண்டுதலுக்கு பதிலளிப்பேன்) என்று இறைவன் கூறுகின்றான். இதிலுள்ள இரகசியம் என்னவென்றால், சில சமயம் துஆ செய்பவரின் நன்மை மற்றும் பயன் அந்த துஆவை மறுப்பதிலேயே அமைகின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 106)

அதாவது சில சமயங்களில் துஆ செய்யக்கூடியவரின் நன்மை மற்றும் பயன் துஆ ஒப்புக் கொள்ளப்படாமல் இருப்பதிலேயே அமைந்திருக்கின்றது. பின்னர் இதே விஷயத்தை விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

துஆவின் அடிப்படை இதுவே ஆகும். துஆவை ஒப்புக் கொள்வதில் அல்லாஹ் நமது எண்ணங்கள் மற்றும் விருப்பங்களை பின்பற்றுவதில்லை. பாருங்கள்! குழந்தைகள் தங்களது தாய்மார்களுக்கு எந்த அளவிற்கு நேசத்திற்குரியவர்களாக இருக்கின்றார்கள். தனது பிள்ளைகளுக்கு எந்த வகையிலும் துன்பம் ஏற்படக்கூடாது என்று தாய் விரும்புகின்றாள். ஆயினும் பிள்ளைகள் அறிவின்மையால் அடம்பிடித்து அழுது புலம்பி கூர்மையான கத்தியையோ அல்லது ஒளிமயமாக காட்சியளிக்கும் நெருப்பின் கங்குகளையோ கேட்டால் அந்த தாய் தனது பிள்ளையின் மீது உண்மையான அன்பும் உள்ளத்தில் உண்மையான துடிப்பும் கொண்டிருந்தும் கூட தனது பிள்ளை நெருப்பின் துண்டுகளை கையால் தொட்டு அல்லது கத்தியின் கூர்மையான பகுதியை கையை கிழுத்துக் கொள்வதை ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டாள். ஒருபோதும் விரும்ப மாட்டாள். இதே வழிமுறையின் அடிப்படையில் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் வழிமுறையை புரிந்து கொள்ள முடியும்.

நான் சுயம் இந்த விவகாரத்தில் ஒரு அனுபவம் படைத்தவனாக இருக்கின்றேன். துஆவில் தீங்கு ஓர் அம்சமாக அமைந்திருக்கும்போது பின்னர் அந்த துஆ ஒருபோதும் ஒப்புக் கொள்ளப்படுவதில்லை. எனது அனைத்து துஆக்களும் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டன என்பதல்ல. அல்லாஹ்வே நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். அவனுக்கு மறைவானவற்றின் ஞானம் உள்ளது. ஒரு விஷயம் அந்த துஆவில் தீங்காக இருக்கின்றபோது, பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றபோது பின்னர் எனது அந்த துஆ ஒப்புக் கொள்ளப்படுவதில்லை. நமது அறிவு உறுதியானதாகவும், சரியானதாகவும் இருப்பதில்லை என்பதை நன்கு புரிந்து கொள்ள முடியும். ஏராளமான பணிகளை நாம் மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகவும், வாழ்த்துக்குரியதாகவும் கருதி

செய்கின்றோம். மேலும் அதனுடைய விளைவும் மிகவும் அருளுக்குரியதாக இருக்கும் என்றும் நாம் எண்ணம் கொள்கின்றோம். ஆனால் முடிவில் அந்தப் பணி ஒரு வேதனை மற்றும் துன்பத்திற்குரியதாக அமைந்து விடுகின்றது.

இதற்கு ஏராளமான உதாரணங்களை நாம் அன்றாடம் பார்க்கின்றோம். தினசரி தபால்களில் நான் அதனை பார்த்துள்ளேன். மக்களிடமிருந்து கடிதங்கள் வருகின்றன. துஆக்கள் செய்கின்றனர். பின்னர் வலுக்கட்டாயமாக ஒரு பணியை செய்வதற்கு முயற்சியும் செய்கின்றனர். பின்னர் அதனுடைய விளைவு நன்மையாக அமைவதில்லை. அந்நிலையில் அல்லாஹ்வின் மீது அவர்கள் முறையீடு செய்கின்றனர். நாங்கள் மிகவும் துஆ செய்தோம். தான தர்மங்கள் செய்து இந்தப் பணியை தொடங்கினோம். ஆயினும் இதனுடைய விளைவு நல்லதாக அமையவில்லை. எங்களது அந்த துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று அவர்கள் கருதுகின்றனர்.

அல்லாஹ்விடத்தில் எந்த அளவுக்கு தொடர்புகள் ஏற்பட வேண்டுமோ அது ஏற்பட்டதா? இல்லையா? என்று பார்க்க வேண்டும். அவ்வாறு ஏற்படவில்லையென்றால் பின்னர் அது (துஆ) வாய்ப் பேச்சுக்களாகவே அமையும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதற்கேற்ப நமது துஆ அமைந்திருக்க வேண்டும். துஆவின் உச்சத்தை நாம் சென்றடையச் செய்து பின்னர் அல்லாஹ் அதனை ரத்து செய்து விட்டான் என்றால், அதனுடைய விளைவுகள் வெளிப்படவில்லை என்றால், பின்னர் அதில் அல்லாஹ்வின் நுட்பமான ஞானம் இருக்கும். அதிலேயே மனிதனின் நன்மையும் இருக்கும். மனிதன் தவறின் காரணமாக அழுத்தம் கொடுக்கின்றான். எனவே அல்லாஹ்வின் மீது முறையீடு செய்வதற்கு பகரமாக என்னிடத்தில் தவறு ஏற்பட்டு விட்டது. நான் இந்த விஷயத்திற்காக அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தேன் என்று மனிதன் பாவமன்னிப்பு கோர வேண்டும்.

சிலர் உள்ளனர். அவர்கள் துஆ செய்கின்றார்கள். அல்லாஹ் அதனை ஒப்புக் கொண்டு விடுகின்றான். அது நன்மையாக இல்லையென்றாலும் கூட அதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் துஆ செய்கின்றனர். சில திருமண பந்தங்களிலும் அவ்வாறு நடந்துள்ளது. அல்லாஹ் அவர்களின் துஆக்களை ஏற்றுக் கொண்டு விடுகின்றான். அவர்கள் எங்கு விரும்பினார்களோ அங்கு திருமணமும் ஆகி விடுகின்றது. ஆனால் சில காலம் கழித்து அவர்கள் பிரிந்து விடுகின்றனர். எனவே இதுபோன்ற துஆக்கள் செய்யக்கூடாது. சில முறை அல்லாஹ் மனிதனுக்கு படிப்பினை வழங்குவதற்காகவும் இவ்வாறு அவனது சில துஆக்களை ஒப்புக் கொண்டு விடுகின்றான். அது அவருக்கு நன்மை அளிப்பதாக இருப்பதில்லை. ஆனால் முடிவு வெளிப்பட்ட உடன் பின்னர் அந்த நபர் தப்வா மற்றும் இஸ்திஃபார் செய்கின்றார்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சுருக்கமாக, மனித விருப்பங்கள் அனைத்தும் சரியானதாக இருக்கின்றன என்று ஏற்றுக் கொள்ள முடியாது. மனிதன் மறதியால் பிணைக்கப்பட்டுள்ளான். தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. எனவே சில முறை மனித விருப்பங்கள் தீங்கிழைப்பதாக அமைகின்றன. அல்லாஹ் அதனை ஒப்புக் கொண்டு விட்டால் அது இறைவனின் கருணைக்கு எதிராக அமையும். சில ஆசைகள் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றன. அந்த மனிதர் அல்லாஹ்வின் உண்மையான அடியாராக இருந்தால் பின்னர் அல்லாஹ் அந்த துஆவை அந்த நபருக்கு ஒருபோதும் ஒப்புக் கொள்வதில்லை. ஏனெனில் இந்த விஷயம் இறைவனின் கருணை எனும் அந்தஸ்திற்கு எதிரானதாக அமைகின்றது. இறைவன் தனது நேசர்களுக்கு ஒருபோதும் இதுபோன்ற பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. அல்லாஹ் தனது அடியார்களின் துஆக்களை கேட்கின்றான்.

மேலும் அதனை ஒப்புக் கொள்கின்றான் என்பது ஒரு உண்மையான, உறுதியான விஷயமாகும். ஆயினும் ஒவ்வொரு மனிதருக்கும் அல்லாஹ் இவ்வாறு செய்வதில்லை. ஏனென்றால் மன உணர்ச்சியின் காரணமாக மனிதன் முடிவு மற்றும் விளைவை பார்ப்பதில்லை. மேலும் துஆ செய்கின்றான். இதன் விளைவு என்னவாக அமையும் என்பதை அவன் சிந்திப்பதே கிடையாது. ஆனால் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவனாகவும், தொலைநோக்குப் பார்வை உடையவனாகவும் அல்லாஹ் இருக்கின்றான். அவன் பாதிப்புகள் மற்றும் தீய விளைவுகளை கருத்தில் கொண்டு செயலாற்றுகின்றான். துஆவை ஒப்புக் கொள்வதால் துஆ செய்தவருக்கு தீங்கு ஏற்படும் என்றால் அந்த துஆவை மறுத்து விடுகின்றான். இவ்வாறு அந்த துஆ மறுக்கப்படுவதே அந்த நபருக்கு துஆ ஒப்புக் கொள்ளப்படுவதாக அமைகிறது. தனது நேசர்களுக்கு இறைவன் இதனையே விதிமுறையாக வைத்துள்ளான். எனவே எந்த துஆக்களில் மனிதன் ஆபத்துகள் மற்றும் துன்பங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கின்றானோ அந்த துஆக்களை இறைவன் ஒப்புக் கொண்டு விடுகின்றான். ஆனால் தீங்கு தருகின்ற துஆக்களை இறைவன் ரத்து செய்வதன் மூலம் ஒப்புக் கொண்டு விடுகின்றான்.

அன்னார் கூறினார்கள்: நான் ஏற்கனவே கூறியதுபோன்று أُجِيبُ كُلَّ دُعَائِكَ (உமது அனைத்து துஆக்களையும் நான் ஒப்புக் கொள்கிறேன்) என்ற இந்த இல்ஹாம் எனக்கு மீண்டும் மீண்டும் இறங்கியது. வேறொரு வார்த்தைகளில் கூறுவதாக இருந்தால் மனிதனுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கின்ற அனைத்து துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதற்கு இவ்வாறு விளக்கமளிக்கின்றார்கள்: பயன் தருகின்ற துஆ ஒப்புக் கொள்ளப்படுகின்றது. நான் இந்த விஷயத்தை எனது உள்ளத்தில் எண்ணுகின்றபோது அதனால் எனது ஆன்மா மகிழ்ச்சியிலும் இன்பத்திலும் மூழ்கி விடுகின்றது. எனக்கு இந்த இல்ஹாம் முதன் முதலில் இறங்கி சுமார் 25 அல்லது 23 ஆண்டுகள் இருக்கும். அல்லாஹ் எனது துஆக்களை கேட்கின்றான். என்னைப் பற்றியோ அல்லது எனது சகோதரர்கள் தொடர்பாகவோ அமைகின்ற எனது துஆக்களை நிச்சயம் (இறைவன்) ஒப்புக் கொள்கின்றான் என்ற இந்த விஷயம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இந்த விஷயத்தில் கருமித்தனம் காட்டக்கூடாது என்ற எண்ணமும் எனக்கு ஏற்பட்டது. ஏனென்றால் இது ஓர் இறை அருட்கொடை ஆகும்.

அல்லாஹ் وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ (அவர்கள் தமக்கு வழங்கப்பட்டவைகளிலிருந்து செலவு செய்வார்கள்) என்று இறையச்சமுடையவர்களின் பண்பாக கூறியுள்ளான். எனவே நான் எனது நண்பர்களுக்காக இதனை விதிமுறையாக வைத்துள்ளேன். அதாவது அவர்கள் எனக்கு நினைவூட்டினாலும், நினைவூட்டாவிட்டாலும் எனக்கு ஒன்றை அவர்கள் முன் வைத்தாலும், முன் வைக்காவிட்டாலும் கடினமான விவகாரங்களை அவர்கள் எனக்கு அனுப்பினாலும், அனுப்பாவிட்டாலும் அவர்களின் மார்க்க பௌதீக நன்மைகளுக்காக துஆ செய்யப்படுகின்றன.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 106–108 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் நிபந்தனைகளை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இந்த விஷயத்தையும் உள்ளத்தால் நன்கு கேட்டுக் கொள்ள வேண்டும். அதாவது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கும் சில நிபந்தனைகள் உள்ளன. அதில் சில, துஆ செய்யக்கூடியவருடன்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

தொடர்புடையதாகும். மேலும் சில யாருக்காக துஆ செய்யப்படுகின்றதோ அவரைப் பற்றியதாகும். துஆ செய்ய விரும்புகின்றனர் அல்லாஹ்வின் அச்சத்தை கருத்தில் கொண்டு நடக்க வேண்டும். இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். துஆவிற்காக கூறக்கூடியவருக்கும் இந்த விஷயம் அவசியமானதாகும். அவர் எப்போதும் அல்லாஹ்வின் அச்சத்தை கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் இறைவன் எந்தத் தேவையும் அற்றவன் என்பதை எண்ணி எப்போதும் அஞ்சிக் கொண்டிருக்க வேண்டும்.

நினைவிற் கொள்ளுங்கள். அல்லாஹ் தேவையற்றவன் ஆவான். எப்போதும் அவனது உள்ளத்தில் அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் இருக்க வேண்டும். சமாதானத்தையும், இறைவணக்கத்தையும் தனது அடையாளமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இவை மிக அவசியமான விஷயங்களாகும். சமாதானத்தையும் இறைவணக்கத்தையும் தனது அடையாளமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இறையச்சம் மற்றும் உண்மையுடன் இறைவனை மகிழ்விக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அந்நிலையில் துஆவிற்கு ஒப்புக் கொள்ளப்படுதல் என்ற வாசல் திறக்கப்படும். இதுபோன்ற சூழல் உருவாகி விடும்பொழுதும், இந்த அனைத்து நிபந்தனைகளும் முழுமையாகி விடும்போதும் அல்லாஹ் துஆ ஒப்புக் கொள்ளப்படுதலின் வாசலை திறக்கின்றான். அவர் இறைவனை கோபமூட்டுகின்றார் என்றால் அவனுடன் தொடர்பை துண்டித்து சண்டையிடுகின்றார் என்றால் அல்லாஹ்வின் கட்டளையின்படி அவர் நடக்கவில்லை என்றால் மேலும் அல்லாஹவிற்குரிய உரிமைகள் மற்றும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளை அவர் வழங்கவில்லை என்றால் பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அதுபோன்ற தீங்குகள் மற்றும் தவறுகள் துஆவின் வழியில் ஒரு கற்பாறையாக மாறி விடுகிறன. சுவராக மாறி விடுகின்றது. அது தடையாக மாறி விடுகிறது. பாறையைப் போன்று அது நின்று விடுகின்றது. துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் வாசல் அந்த அடியாருக்கு அடைபட்டு விடுகின்றது. அந்த நபருக்கு துஆ ஒப்புக் கொள்ளப்படுதலின் கதவு அடைக்கப்படுகிறது. அந்த நபரின் சொந்த துஆவும் ஒப்புக் கொள்ளப்படுவதில்லை. அந்த நபர் யார் மூலமாக துஆ செய்கின்றாரோ அந்த நபரின் துஆவும் அவருக்கு ஆதரவாக ஒப்புக் கொள்ளப்படுவதில்லை. எனவே நமது துஆக்கள் வீணாகுவதிலிருந்து பாதுகாப்பதும், அவர்களின் வழியில் தடையாக ஆகிவிடாமல் இருப்பதற்கும் (முயற்சி செய்வது) எமது நண்பர்களுக்கு அவசியமாகும். மேலும் அவர்களின் பொறுப்பற்ற செயல்களால் இந்த நிலைமை உருவாகாமல் இருக்க கருத்தில் கொண்டு செயல்படுவது எமது அன்பர்களுக்கு அவசியமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 108 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அமல்கள் சரியில்லை என்றால் எனது துஆக்களும் கூட உங்களுக்கு ஆதரவாக ஒப்புக் கொள்ளப்படாது. இன்னும் கூறப்போனால் உங்களது (தீய) செயல்கள் அது (துஆ) ஒப்புக் கொள்ளப்படுவதற்கான வழியில் தடைக் கற்களாக ஆகிவிடுகின்றன. அடுத்து துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு இந்த விஷயமும் அவசியமாகும். அதாவது மனிதன் கொள்கை அளவில் உறுதிவாய்ந்தவனாக இருக்க வேண்டும். இது அடிப்படை நிபந்தனையாகும். மேலும் நற்செயல் செய்பவனாக மனிதன் இருக்க வேண்டும். நற்செயல் பற்றி இதற்கு முன்பும் நான் கூறியுள்ளேன். அதாவது எனது கூற்றுகளை நீங்கள் செவிமடுக்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு நேர்மறையான பதிலளித்து அதனை ஒப்புக் கொண்டு அதன்படி செயல்பட வேண்டும். இந்தவோர் அடிப்படை விஷயம் தான் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு மிகவும் அவசியமாகும்.

இதை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எந்த நபர் அமல்கள் செய்வதில்லையோ அவர் துஆ செய்யவில்லை என்பது உண்மையான விஷயமாகும். இன்னும் கூறப்போனால், அத்தகைய நபர் இறைவனை சோதித்துப் பார்க்கின்றார். எனவே துஆ செய்வதற்கு முன்பு முதலில் தனது அனைத்து ஆற்றல்களையும் செலவிடுவது அவசியமாகும். இதுவே துஆ செய்வதன் பொருளாகும். அதாவது மனிதன் முதலில் தனது கொள்கைகள் மற்றும் செயல்களை சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமாகும். ஏனென்றால் இறைவனின் பழக்கம் இவ்வாறாக உள்ளது. அதாவது சீர்திருத்தம் காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதாவது காரணிகள் அவருக்கு ஏற்பாடாக அமையும். தனது நிலைகளை சரி செய்து கொண்டு அதற்காக முயற்சி செய்தால் பின்னர் சீர்திருத்தமும் நடைபெறும். அவ்வாறு செய்தால் சீர்திருத்தத்திற்கு காரணியாக அமைகின்ற ஏதாவதொரு ஒரு ஏற்பாட்டை அவன் செய்து விடுகின்றான். துஆ உண்மையான உள்ளத்துடன் செய்யப்படுகின்றதென்றால் சீர்திருத்தத்திற்கு காரணியாக அமைந்து விடக்கூடிய ஏதாவதொரு ஏற்பாட்டை இறைவன் உருவாக்கி விடுகின்றான்.

துஆ செய்யப்பட்டால் காரணிக்கான என்ன அவசியம் இருக்கின்றது? என்று கேள்வி கேட்கக்கூடிய நபர்கள் இந்த விஷயத்தை சற்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அந்த அறிவிலி சிந்திக்க வேண்டும். துஆ சுயமே ஒரு மறைவான காரணியாக உள்ளது. துஆ செய்வதும் கூட ஒரு காரணி தானே! ஆனால் அந்த துஆ மற்ற காரணிகளை உருவாக்கி விடுகின்றது.

اِیَّاکَ نَعۡبُدُ என்பது اِیَّاکَ نَسۡتَعِیۡنُ என்பதற்கு முன்னால் வந்துள்ளது. இதிலுள்ள சொற்கள் இதிலுள்ள விஷயத்தை சிறப்பாக விளக்குகின்றது. அதாவது நாங்கள் உன்னையே வணங்குகின்றோம். பின்னர் எங்களது பணி நடந்து விடுவதற்காக உன்னிடமே உதவியும் தேடுகின்றோம். இது இந்த விஷயத்தை சிறப்பாக விளக்குகின்றது. சுருக்கமாக, அல்லாஹ்வின் நடைமுறையாக நாம் இதனை பார்க்கின்றோம். அவன் காரணிகளை உருவாக்குகின்றான். அதாவது மனிதனுக்கான காரணிகளை அவன் உருவாக்குகின்றான்.

பாருங்கள்! தாகத்தை தணிப்பதற்கு தண்ணீர் உள்ளது. பசியை தீர்ப்பதற்கு உணவை அவன் உருவாக்கியுள்ளான். ஆயினும் காரணிகள் மூலமாகவே உருவாக்கியுள்ளான். மாயஜாலத்தால் தாகம் தணிந்து விடுவது கிடையாது. அல்லது தண்ணீர் வானத்திலிருந்து ஒரு நொடிப்பொழுதில் மாயஜாலத்தால் வந்து விடுவது கிடையாது. உணவும் உருவாகி விடுவது கிடையாது. காரணிகள் உருவாகின்றன. அந்தக் காரணிகள் மூலமாகவே நமக்கு தண்ணீர் கிடைக்கின்றது. உணவு கிடைக்கின்றதென்றால் அதுவும் காரணிகள் மூலமாகவே கிடைக்கின்றது. எனவே இந்த காரணிகளின் தொடர் இவ்வாறு

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

நடைபெற்று வருகின்றது. நிச்சயமாக காரணிகள் படைக்கப்படுகின்றன. ஏனென்றால் இறைவனுக்கு இரண்டே பெயர்கள் உள்ளன.

كَانَ اللهُ عَزِيْزًا حَكِيْمًا – அஸீஸ் என்பதன் பொருள் என்னவென்றால், ஒவ்வொரு பணியையும் செய்வதாகும். ஹகீம் என்பதன் பொருள் என்னவென்றால், ஒவ்வொரு பணியையும் ஒரு நுட்பமான ஞானத்துடனும், இடம் பொருளுக்கு ஏற்பவும் செய்வதாகும். பாருங்கள்! தாவரங்கள் இருக்கின்றன. பலதரப்பட்ட சொடி கொடிகள் இருக்கின்றன. தர்பூத்தை (ஒரு வகையான மூலிகை செடி) எடுத்துக் கொள்ளுங்கள். அதை இம்மியளவு எடுத்துக் கொள்வதால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு விடுகின்றது. அல்லாஹ் வயிற்றுப்போக்கு ஏற்பட்டவுடன் அதை உடனே நிறுத்தி விடுவதற்கும், தாகம் ஏற்பட்டால் தண்ணீர் இல்லாமல் அதை தணித்து விடுவதற்கும் ஆற்றல் படைத்தவனாக இருக்கின்றான். வயிற்றைத் திறந்து அதை சரி செய்து விடுவதற்கும், தண்ணீரின்றி தாகத்தை தணித்து விடுவதற்கும் அல்லாஹ் வல்லமை படைத்தவனாக இருக்கின்றான். ஆனால் இயற்கையின் அற்புதங்களைப் பற்றிய அறிவை ஏற்படுத்துவதும் அவசியமாக இருந்தது.

இறைவனே பொருட்களை படைத்துள்ளான். இது அவனது வல்லமையின் அற்புதங்களாகும். அதைப் பற்றி மக்களுக்கு அறிவை ஏற்படுத்துவதும் அவசியமாக இருந்தது. ஏனென்றால் எந்த அளவிற்கு தொடர்பும் இறை வல்லமையின் அற்புதங்களின் அறிவும் பரந்துபட்டதாக இருக்குமோ அதே அளவிற்கு மனிதன் அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றி அறிந்து அவனது நெருக்கத்தை பெறுவதற்கு தகுதி படைத்தவனாக ஆகி விடுகின்றான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 124, 125 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

மனிதனின் ஆன்மீக கண்கள் இதை கண்டு கொள்ள வேண்டும். அதாவது ஏகத்துவ சிந்தனை கொண்ட ஒரு விஞ்ஞானி அதாவது அல்லாஹ்வை ஏற்றுக் கொண்ட விஞ்ஞானி ஒவ்வொரு கண்டுபிடிப்பின்போதும், அல்லது ஒவ்வொரு விஷயத்தையும் பார்க்கின்றபோதும் சீர்தூக்கிப் பார்த்து அல்லாஹ்வின் இருப்பிற்கான சான்றை பெற்றுக் கொள்கின்றார். அவரது ஈமான் அதிகரிக்கின்றது. ஆனால் ஒரு நாத்தீகவாதி அதனை விபத்து என்று கூறி விடுகின்றார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த தனது வல்லமையின் அற்புதங்களை வெளிப்படுத்துவது எதனால் என்றால் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு நோக்கம் உள்ளது என்பதை மனிதன் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஆகும்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனிதன் இறையச்சத்தின் வழியை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் தக்வா என்பது இறை சட்டத்தின் சுருக்கம் என்று நம்மால் கூற முடியும். ஷரீஅத்தை நாம் சுருக்கமாக எடுத்துரைக்க விரும்பினால் ஷரீஅத்தின் சாராம்சமாக தக்வா உள்ளது. தக்வாவிற்கு ஏராளமான படித்தரங்கள் உள்ளன. ஆனால் உண்மையான தேடுபவராக இருந்து ஆரம்ப கால படித்தரங்களை உறுதிப்பாட்டுடனும், கலப்பற்றத் தன்மையுடனும் கடந்தால் பின்னர் அத்தகைய நபர் தனது நேர்மை மற்றும் உண்மையை தேடியதன் விளைவாக உயர் தரமான படித்தரங்களைப் பெற்றுக் கொள்கின்றார். அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

إِنَّمَا يَتَقَبَّلُ اللهُ مِنَ الْمُتَّقِيْنَ

இறையச்சமுடையவர்களின் துஆக்களை அல்லாஹ் ஒப்புக் கொள்கின்றான். (5:28)

إِنَّمَا يَتَقَبَّلُ اللهُ مِنَ الْمُتَّقِيْنَ இதில் இறைவன் வாக்குறுதி செய்துள்ளான். அவன் தனது வாக்குறுதிகளை மீறுவதில்லை. இறைவன் மற்றோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

إِنَّ اللهَ لَا يُخْلِفُ الْمِيْعَادَ

அல்லாஹ் வாக்குறுதிகளுக்கு மாற்றம் செய்வதில்லை.

إِنَّ اللهَ لَا يُخْلِفُ الْمِيْعَادَ

எனவே எல்லா நிலையிலும் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு தக்வா என்பது ஒரு முக்கிய நிபந்தனை ஆகும். அது எப்படிப்பட்ட நிபந்தனை என்றால் அதனைப் பிரிக்கவும் முடியாது. கை விடவும் முடியாது. நிராகரிக்கவும் முடியாது. எனவே கவனமற்ற மனிதன் விதிமுறைகளிலிருந்து விலகி துஆ ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்பினால் அவன் முற்றிலும் அறிவிலியாகவும், முட்டாளாகவும் இருக்கின்றான். எனவே எனது ஜமாஅத்தின் மீது கடமை என்னவென்றால் அவர்களால் எந்த அளவுக்கு முடியுமோ இறையச்சத்தின் வழிகளில் அடியெடுத்து வைக்க வேண்டும். துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் மகிழ்ச்சியையும், இன்பத்தையும் பெற்று ஈமானை உறுதிப்படுத்திக் கொள்ளும் அம்சமாக அவர்கள் அதனை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 108,109 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அல்லாஹ் கூறுகின்றான்: என்மீது ஈமான் கொள்ளுங்கள். அதன் மூலம் ஈமான் அதிகரிக்கும். அதன் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கருணையின் வகைகளை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இதை நினைவிற் கொள்ளுங்கள். கருணை என்பது இரு வகைப்படும். ஒன்று, ரஹ்மானிய்யத் என்ற பெயராலும், மற்றொன்று ரஹீமிய்யத் என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது. ரஹ்மானிய்யத் எப்படிப்பட்டதென்றால், அது நமது இருப்பிற்கு முன்னரே மற்றும் நாம் படைக்கப்படுவதற்கு முன்பே ஆரம்பமாகி விட்டது. உதாரணமாக, அல்லாஹ் ஆரம்பத்திலேயே தனது முழுமையான ஞானத்தின் மூலம் இதுபோன்ற பூமி மற்றும் வானத்தையும் மேலும் பூமி மற்றும் விண்ணின் பொருட்களையும் படைத்துள்ளான். அவை அனைத்தும் நமக்கு பயனளிக்கக் கூடியதாக உள்ளன. மேலும் பயன்படுகின்றன. இந்த அனைத்துப் பொருட்களிலிருந்தும் பொதுவாக மனிதனே பயன் பெறுகின்றான். ஆடு, மாடு மற்றும் ஏனைய விலங்குகளை விடவும் மனிதனே பயன் பெறுகின்றான். அவை அனைத்தும் மனிதனுக்கு பயனளிக்கக் கூடியவையாக உள்ளன. இவை அனைத்தும் மனித பயனுக்காக படைக்கப்பட்டுள்ளன.

பாருங்கள்! பௌதீக காரணிகளில் எந்த அளவிற்கு வகை வகையான ருசியான உயர்தரமான இறைச்சி மனிதனுக்கு தான் கிடைக்கின்றன. நாய்களுக்கு துண்டுகளும், எலும்புகளும் கிடைக்கின்றன. மனிதனுக்கு ஏராளமான இன்பங்கள் கிடைக்கின்றன. அதில் விலங்குகளும் பங்கு பெறுகின்றன என்றாலும் மனிதனுக்கு கிடைக்கின்ற உயர்தரமான ஆன்மீக இன்பங்களில் விலங்குகள் பங்கு பெறுவது கிடையாது. ஆன்மீக இன்பங்கள் மனிதனுக்கு மட்டுமே உரியதாக உள்ளன. விலங்குகள் அதில் பங்கு பெறுவது கிடையாது.

எனவே இவை இரு வகையான ரஹ்மத்துகள் ஆகும். ஒன்று, நமது படைப்பிற்கு முன்னரே ஆயத்தப்படுத்தப்பட்டவை ஆகும்.


திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

அதாவது நமது நன்மைக்காக படைக்கப்பட்ட பொருட்களாகும். அவை நமது படைப்பு, விருப்பம் மற்றும் துஆவிற்கு முன்னரே உருவானவை ஆகும். நாம் பிறப்பதற்கு முன்னரே இந்த விஷயங்கள் படைக்கப்பட்டுள்ளன. நாம் விருப்பப்படுவதற்கு முன்பே இவ்விஷயங்கள் உள்ளன. நாம் துஆ செய்வதற்கு முன்னரே இந்த விஷயங்கள் உள்ளன. அவை அனைத்தும் ரஹ்மானிய்யத்தின் தேட்டத்தால் உருவாகின. இந்த அனைத்து விஷயங்களும் அல்லாஹ்வின் ரஹ்மானிய்யத்தின் காரணமாக உருவாகின. இரண்டாவது ரஹ்மத் என்பது, ரஹீமிய்யத் ஆகும். அதாவதும் நாம் (துஆ) செய்கின்றோம் என்றால் இறைவன் அருளுகின்றான். சீர்தூக்கிப் பார்த்தால் இயற்கை சட்டத்துடன் எப்பொழுதும் துஆவிற்கு தொடர்பு உள்ளது என்பது தெரிய வரும். சிலர் இன்றைய நாட்களில் இதனை பித்அத் என கருதுகின்றனர். இறைவனுடன் எமது துஆவிற்குள்ள தொடர்பையும் எடுத்துரைக்க நான் விரும்புகின்றேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். அதாவது ஒரு மனிதனுக்கு துஆவுடன் உள்ள தொடர்பை அன்னார் கூறுகின்றார்கள்:

ஒரு குழந்தை பசியால் பரிதவித்து பாலுக்காக அழுகின்றபோது அதன் தாயின் மார்பில் பால் சுரந்து விடுகின்றது. குழந்தை துஆவின் பெயரைக் கூட அறிவதில்லை. ஆயினும் அதன் அழுகை பாலை எவ்வாறு ஈர்த்து வருகின்றது? இதுபற்றி ஒவ்வொருவருக்கும் அனுபவம் இருக்கும். சில முறை இவ்வாறு பார்க்கப்பட்டுள்ளது. அதாவது தாய், பாலை உணர்வதில்லை. ஆயினும் குழந்தையின் அழுகை பாலை ஈர்த்துக் கொண்டு வந்து விடும். அவ்வாறிருக்க இறைவனின் சன்னிதானத்தில் நாம் அழுது புலம்பினால் அது எதனையும் ஈர்த்து வராதா என்ன? ஈர்த்து வரும். அனைத்தும் வரும். ஆயினும் அறிஞர்கள் மற்றும் தத்துவஞானிகளாக அமர்ந்திருக்கின்ற குருடர்களால் அதனைக் காண முடியாது. குழந்தைக்கு தாயுடன் உள்ள தொடர்பை மற்றும் உறவை தனது மூளையில் பதியச் செய்து துஆவின் தத்துவத்தை சீர்தூக்கிப் பார்த்தால் பின்னர் அந்த விஷயம் மிகவும் எளிதாக புரிந்து விடும். இரண்டாவது வகை கருணை நமக்கு இந்த போதனையை தருகின்றது. அதாவது ஒரு கருணை கேட்ட பிறகு கிடைக்கின்றது. கேட்டுக் கொண்டே சென்றால் கிடைத்துக் கொண்டே செல்லும்.

اُدْعُوْنِیْٓ اَسْتَجِبْ لَكُمْ (நீங்கள் என்னிடம் வேண்டுங்கள். நான் உங்கள் வேண்டுதலுக்குப் பதில் அளிப்பேன்) என்று அல்லாஹ் கூறியிருப்பது வெறும் வாய்ப் பேச்சு அல்ல. மாறாக இது மனித இயல்பின் ஒரு கட்டாய தேவையாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 128–130 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அடுத்து கேட்பது மனிதனின் கடமையாகும். ஒப்புக் கொள்வது அல்லாஹ்வின் பணியாகும் என்ற விஷயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

கேட்பது மனிதனின் கடமையாகும். ஒப்புக் கொள்வது அல்லாஹ்வின் கடமையாகும். எவர் இதனை ஒப்புக் கொள்ளவில்லையோ அவர் பொய்யர் ஆவார். குழந்தையின் உதாரணத்தை நான் எடுத்துரைத்துள்ளேன். அது துஆவின் தத்துவத்தை நமக்கு நன்கு தெளிவுபடுத்துகின்றது. ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத் என்பது இரண்டல்ல. எனவே எவர் ஒன்றை விட்டு விட்டு மற்றொன்றை விரும்புவாரோ அவருக்கு கிடைக்காது.

ரஹ்மானிய்யத்தின் தேட்டம் என்னவென்றால், அது நம்மிடத்தில் ரஹீமிய்யத்தின் அறிவிலிருந்து பயன் பெற வேண்டுமென விரும்புகிறது. அல்லாஹ்வின் ரஹ்மானிய்யத் என்பது இதுவாகும். அதாவது அவன் நமக்கு பாதையை காட்டி விட்டான். விஷயங்களை எடுத்துரைத்து விட்டான். மேலும் அவனிடமிருந்து நாம் எந்த விஷயங்களை வேண்டி பெற வேண்டுமோ அதற்கு அவன் தைரியத்தை நம்மிடம் உருவாக்குகின்றான். ரஹ்மானிய்யத் என்பது அதற்காக துஆ செய்வதற்கும், அல்லாஹ்வின் ரஹீமிய்யத்தை பெறுவதற்கும் வழிமுறையாகவும் அமைகின்றது. எவர் அவ்வாறு செய்வதில்லையோ அவர் அருட்கொடையை நிராகரிப்பவர் ஆவார்.

اِيَّاكَ نَعْبُدُ என்பதன் பொருள், நாங்கள் உன்னையே வணங்குகின்றோம் என்பதாகும். அதாவது நீ எங்களுக்கு வழங்கியுள்ள வெளிப்படையான பொருட்கள் மற்றும் காரணிகளிலிருந்து நாங்கள் பயன் பெறுகின்றோம். நாங்கள் இறைவணக்கம் செய்கின்றோம். இந்த வெளிப்படையான காரணிகளை இறைவணக்கத்திற்கு பயன்படுத்துகின்றோம்.

பாருங்கள்! நாவு உள்ளது. (நாவின் உதாரணத்தை அன்னார் எடுத்துரைக்கின்றார்கள்). நாவின் நரம்புகள் இருக்கின்றன. எச்சில் இருக்கின்றது. அல்லது உறுப்புகள் இருக்கின்றன. இவை அனைத்தும் நாவின் அங்கமாகும். இதன் மூலமாகவே நாவு உருவாகி உள்ளது. அவ்வாறு இல்லையென்றால் நம்மால் பேச முடியாது. அதுபோன்ற நாவு வறண்டு விடும். நாவு வறண்டு விட்டால் அதன் நரம்புகள் ஈரமாக இல்லையென்றால் பின்னர் மனிதனால் எல்லா நேரமும் பேச முடியாது. அப்போது மனிதனால் நாவை அசைக்க முடியாது.

அன்னார் கூறினார்கள்: உள்ளத்தின் எண்ணங்களை துஆவாக வெளிப்படுத்துவதற்கு நாவு வழங்கப்பட்டுள்ளன. மேலும் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்காக நாவு வழங்கப்பட்டுள்ளது. நாம் அதனைக் கொண்டு பேசுகின்றோம். நாம் நாவைக் கொண்டு துஆவிற்கான பணியை செய்யவில்லை என்றால் பின்னர் அது நமது பெரும் துர்பாக்கியம் ஆகும். ஏராளமான நோய்கள் உள்ளன. அவை நாவுக்கு ஏற்பட்டு விட்டால் திடீரென நாவு செயலிழந்து விடும். எந்த அளவுக்கென்றால் மனிதன் ஊமையாகி விடுவான். எனவே இறைவன் நமக்கு நாவை கொடுத்திருப்பது எத்தனை மகத்தான ரஹீமிய்யத் ஆகும்.

எனது எண்ணம் என்னவென்றால், இங்கு ரஹ்மானிய்யத் என்ற சொல்லே இருக்கின்றது. எவ்வாறிருப்பினும் அல்லாஹ் நாவை வழங்கியுள்ளான். இதுவும் அவனது ரஹ்மானிய்யத் ஆகும். பின்னர் அதனை பயன்படுத்துவதற்குரிய வழிமுறையை அவன் நமக்கு கற்றுக் கொடுத்துள்ளான். அதனை நாமே பயன்படுத்த வேண்டும். இதுவும் ரஹீமிய்யத் ஆகும். அதுபோன்றே காதுகளின் அமைப்பில் வித்தியாசம் ஏற்பட்டு விட்டால் எதனையும் கேட்க முடியாது. அதேபோன்று இதயத்தின் நிலை உள்ளது. அதில் உருக்கத்தின் நிலை உள்ளது. மேலும் சிந்திக்கின்ற ஆற்றல்களும் உள்ளன. அது நோய்வாய்ப்பட்டு விட்டால் ஏறக்குறைய அவை அனைத்தும் வீணாகி விடுகின்றன. மன நோயாளியைப் பாருங்கள். அவர்களின் ஆற்றல்கள் எவ்வாறு வீணாகி விடுகின்றன.

எனவே இறைவன் வழங்கிய இந்த அருட்கொடைகளை கண்ணியப்படுத்துவது நமக்கு கடமையில்லையா? இறைவன் தனது உயரிய அருளால் நமக்கு வழங்கிய இந்த ஆற்றல்களை நாம் வீணாக்கி விட்டால் நிச்சயமாக சந்தேகத்திற்கிடமின்றி நாம் இறை அருட்கொடைகளை நிராகரிக்கக் கூடியவர்களாவோம். எனவே நினைவிற் கொள்ளுங்கள். நாம் நமது ஆற்றல்களையும், திறமைகளையும் வீணடித்து விட்டு துஆ செய்கின்றோம் என்றால் அந்த துஆ எந்த பயனையும் ஏற்படுத்தாது. ஏனென்றால் ஏற்கனவே நமக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பிலிருந்து நாம் எந்த பயனும் பெறாதபோது இனி கிடைக்கும் அருளிலிருந்து எவ்வாறு நாம் பயன் பெறக்கூடியவர்களாக இருக்க முடியும்!

ஆக இந்த உதாரணங்களை வழங்கி அல்லாஹ்வால் வழங்கப்பட்ட அருட்கொடைகளை கண்ணியப்படுத்த வேண்டும் என்றும் மேலும் அதிலிருந்து உயரிய வகையில் பயன் பெற வேண்டும் என்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு தெளிவாக விளக்கி விட்டார்கள். அல்லாஹ்விடத்தில் அதனை சரியான முறையில் பயன்படுத்தக்கூடிய வழியை வேண்ட வேண்டும். அவ்வாறு செய்தால் அதுபோன்ற ஓர் உண்மையான

அடியாரே தமது கடமையை நிறைவேற்றுபவராக இருக்க முடியும். மேலும் இறைவனால் வழங்கப்பட்ட அருட்கொடைக்கு நன்றியும் செலுத்த முடியும். பின்னர் மனிதனின் இந்த நன்றியானது அல்லாஹ்வின் அருளை ஈர்க்கும். ரஹ்மானிய்யத்தால் கிடைக்கப் பெற்ற விஷயங்கள் ரஹீமிய்யத்திலும் பங்கு பெறக்கூடியதாக அமையக்கூடும். துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான காட்சிகளை மனிதன் காண்கின்றான். இதனை மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

اِيَّاكَ نَعۡبُدُ என்பது நமக்கு இதனை விளக்குகின்றது. ரப்புல் ஆலமீனே! நாங்கள் உனது முந்தைய அருளையும் வீணாக்கவில்லை.

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ என்பதில் இவ்வாறு வழிகாட்டப்பட்டுள்ளது. அதாவது மனிதன் இறைவனிடத்தில் உண்மையான அகப்பார்வையை வேண்ட வேண்டும். ஏனென்றால் இறைவனின் அருளும், கருணையும் உதவியும் கிடைக்காதபோது பலவீனமான மனிதன் எப்படிப்பட்ட இருளான குருட்டுத்தனமான நிலைமைகளில் சிக்கிக் கொள்கின்றான் என்றால் அவனால் துஆவே செய்ய முடியாது. அல்லாஹ்வின் அருள் என்னவென்றால், அவனே மனிதனுக்கு வழிகாட்டுகின்றான். அவனே உதவி செய்கின்றான். அவ்வாறில்லையென்றால் மனிதன் பலவீனமானவனாக இருக்கின்றான். அவன் உலகில் சிக்கிக் கொண்டுள்ளான். உலகின் இருளில் மூழ்கி இருக்கின்றான். அத்தகைய மனிதனுக்கு துஆவிற்கான சந்தர்ப்பமே கிடைக்க முடியாது.

எனவே ரஹ்மானிய்யத்தின் அருளினால் மனிதனுக்கு கிடைக்கின்ற இறையருளை மனிதன் பயன்படுத்தி துஆ செய்யாத வரை எந்த நல்ல விளைவும் வெளிப்பட முடியாது. எவ்வாறிருப்பினும் இருளிலிருந்து வெளியேறுவதற்கு எல்லா நிலையிலும் மனிதன் அல்லாஹ்விடத்தில் துஆ கேட்பது அவசியமாகும்.

அன்னார் கூறினார்கள்: சில காலங்களுக்கு முன்பு நான் ஆங்கிலேயர்களின் சட்டங்களில் இதனைப் பார்த்தேன். விவசாயக் கடன் பெறுவதற்கு ஏதாவது பொருட்களை காட்டுவது அவசியமாகும். விவசாயக் கடன் என்பது விவசாயத்திற்காக விவசாயிகள் பெறுகின்ற கடன் ஆகும். (இங்கும் (UK வில்) மக்கள் கடன் பெறுகின்றனர். அதனை Mortage என்று கூறுகின்றனர்.) அதற்கு இடையில் சில தொகையை வழங்குவதும் அல்லது ஏதாவது உத்தரவாதம் கொடுப்பதும் அவசியமாகின்றது. பொருட்களை காட்டுவது அவசியமாக இருக்கின்றது. ஏதாவது ஒன்றை எடுத்து வைப்பது அவசியமாக இருக்கின்றது. இதேபோன்று இயற்கை சட்டத்தைப் பாருங்கள். ஏற்கனவே நமக்கு கிடைத்தவற்றிலிருந்து நாம் என்ன செய்திருக்கிறோம்? அறிவு, சிந்தனை, கண், காது ஆகியவற்றைப் பெற்றிருந்தும் வழிதவறவில்லையென்றால் பின்னர் அறிவீனம் மற்றும் பைத்தியக்காரத்தனத்தை நோக்கி செல்லாமல் இருந்தால் துஆ செய்யுங்கள். இறை அருள் உங்களுக்கு மேலும் கிடைக்கும். இவை அனைத்தும் மனிதனுக்கு கிடைத்திருக்கின்றன.

அல்லாஹ் வழங்கிய இந்த அருட்கொடைகளை மனிதன் வீணாக்கவில்லை என்றால் பின்னர் மனிதன் துஆ செய்யட்டும். அல்லாஹ் நமக்கு இந்த விஷயங்கள் அனைத்தையும் வழங்கியுள்ளான். மேலும் இறைவன் தனது அருளை அதிகரிப்பான். இழப்பிற்குரியவராக ஆகுவதிலிருந்தும், துர்பாக்கியத்தனத்திலிருந்தும் நாம் தப்பிக்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 128–131 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அருட்கொடைகளை சரியாக பயன்படுத்தவில்லை என்றால் பின்னர் துஆக்கள் எந்த பயனையும் தராது. இன்னும் கூறப்போனால், (அந்நிலையில்) இழப்பிற்குரிய தன்மையும், துர்பாக்கியதனமும் தான் மனிதனின் நிலையாக இருக்கும். எனவே நாம் இந்த விஷயத்தின் மீது சீர்தூக்கிப் பார்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: இயற்கை சட்டத்தில் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான உதாரணங்கள் உள்ளன. எல்லா காலத்திலும் இறைவன் உயிருள்ள சான்றுகளை அனுப்புகின்றான். எனவே தான் அவன் اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۙ صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ என்ற துஆவை செய்யும்படி போதனை நல்கியுள்ளான். இது இறைவனின் விருப்பமும், சட்டமும் ஆகும். இதனை எவராலும் மாற்ற முடியாது.

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ என்ற துஆவிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், நாம் நமது செயல்களை முழுமையாக்க வேண்டும். நமது அமல்களை முழுமையாக்க வேண்டும்; பூர்த்தி செய்ய வேண்டும் என்ற இந்த சொற்களை சிந்தித்தால் நமக்கு இவ்விஷயம் தெரிய வருகிறது. வெளிப்படையில் துஆ செய்யும்படி இதில் கட்டளை உள்ளது. நேர்வழியை வேண்டுவதற்கான போதனை வழங்கப்பட்டுள்ளது. இது நிச்சயம் உள்ளது. இதுவே இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆயினும் அதற்கு முன்பாக اِيَّاكَ نَعۡبُدُ وَاِيَّاكَ نَسۡتَعِيۡنُ என்பது நமக்கு இதனை எடுத்துரைக்கின்றது. இதிலிருந்து மனிதன் பயன் பெற வேண்டும். அதாவது ஸிராத்தே முஸ்தகீம் என்ற இடத்தை அடைவதற்கு உறுதியான ஆற்றல்களை பயன்படுத்தியவாறு இறைவனின் உதவியை வேண்ட வேண்டும்.

اِيَّاكَ نَعۡبُدُ وَاِيَّاكَ نَسۡتَعِيۡنُ இது இந்த கருத்தை எடுத்துரைக்கின்றது. அதாவது நேர்வழியை பெற வேண்டும் என்றால் பின்னர் அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள ஆற்றல்களிலிருந்து பயன் பெற்றவாறு நேரான வழியில் நடப்பதற்காக அல்லாஹ்விடத்தில் உதவி வேண்ட வேண்டும். எனவே வெளிப்படையான காரணிகளை பயன்படுத்துவது அவசியமாகும். எவர் அதனை கைவிட்டு விடுகின்றாரோ அவர் இறை அருட்கொடையை நிராகரிப்பவர் ஆவார். நன்மை செய்வதற்கும் கூட அல்லாஹ்விடத்தில் உதவி வேண்ட வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் நமக்கு நாவினை துஆவிற்காக வழங்கியுள்ளான். உள்ளத்தின் எண்ணங்களையும், விருப்பங்களையும் வெளிப்படுத்துவதற்காக அல்லாஹ் நமக்கு நாவை வழங்கியுள்ளான்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: அதேபோன்று அல்லாஹ் உருக்கத்தையும், பணிவையும் உள்ளத்தில் வைத்துள்ளான். மேலும் அதில் சிந்திப்பதற்கும் ஆராய்வதற்கும் ஆற்றல்களை வைத்துள்ளான். எனவே நினைவிற் கொள்ளுங்கள். நாம் இந்த ஆற்றல்களை வீணடித்து விட்டு பயன்படுத்தாமல் துஆ செய்கின்றோம் என்றால் பின்னர் இந்த துஆ எந்த வகையிலும் பயனுள்ளதாக அமையாது. ஏனென்றால் ஏற்கனவே வழங்கப்பட்ட அன்பளிப்புகளிலிருந்து நாம் பயன் பெறாதபோது இனி கிடைப்பதிலிருந்து எவ்வாறு பயன் பெற முடியும்?

எனவே اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ என்பதற்கு முன்னர் اِيَّاكَ نَعۡبُدُ என்பது நமக்கு இந்த கருத்தை எடுத்துக்கின்றது. நாங்கள் நீ ஏற்கனவே வழங்கிய அருட்களையும், ஆற்றல்களையும் வீணாக்கவில்லை. நினைவிற் கொள்ளுங்கள். ரஹ்மானிய்யத் என்பதன் சிறப்பு என்னவென்றால், அது மனிதனை ரஹீமிய்யத் எனும் அருளிலிருந்து பயன் பெறுவதற்கு தகுதி படைத்தவனாக ஆக்கி விடுகின்றது.

எனவே இறைவன் اُدۡعُوۡنِیۡۤ اَسۡتَجِبۡ لَكُمۡ என்று கூறுகிறான். இது வெறும் வாய் வார்த்தை அல்ல. மனிதனின் படைப்பு இதனையே எதிர்பார்க்கின்றது. கேட்பது மனிதனின் கடமையாகும். ஆனால் அல்லாஹ்விடத்தில் வேண்டுவதில் எவர் ஈடுபடவில்லையோ அவர் அநீதியாளர் ஆவர். துஆ என்பது மிகவும் இன்பம் தரக்கூடிய ஒரு தன்மையாகும். நான் எந்த வார்த்தைகளில் அந்த இன்பத்தை, மகிழ்ச்சியை உலகிற்கு புரிய வைப்பேன் என்பதை எண்ணி நான் வேதனை அடைகின்றேன். இதனை உணர்வதன் மூலமே அறிந்து கொள்ள முடியும்.

சுருக்கமாக துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு முதலில் அவசியம் என்னவென்றால், மனிதன் தன்னிடம் நற்செயல்களையும்,

கொள்கைகளையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் எந்த நபர் தனது கொள்கைகளை சரி செய்து கொள்வதில்லையோ, மேலும் நற்செயல்கள் செய்வதில்லையோ மேலும் அந்த நிலையில் துஆவும் செய்கின்றாரோ அவர் ஒரு வகையில் இறைவனை சோதித்துப் பார்க்கின்றார்.

எனவே விஷயம் என்னவென்றால், اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்ற துஆவில் இந்த நோக்கம் கூறப்பட்டுள்ளது. அதாவது நாம் நமது செயல்களை முழுமை செய்ய வேண்டும். அதனை பூர்த்தி செய்ய வேண்டும். அதன் பிறகு صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ என்று (துஆ செய்யுமாறு) இறைவன் கூறியிருக்கின்றான். இதன் மூலம் மேலும் தெளிவாக்கி விட்டான். நாம் எப்படிப்பட்ட நேர்வழியை வேண்டுகின்றோம் என்றால் அது அருட்கொடைகளைப் பெற்ற கூட்டத்தினரின் நேர்வழியாகும். மேலும் இறை கோபத்திற்கு ஆளான கூட்டத்திலிருந்து பாதுகாப்பு பெற வேண்டும். அக்கூட்டத்தினரின் தீய செயல்களின் காரணமாக இறை தண்டனை அவர்களுக்கு இறங்கியது. மேலும் الضَّآلِّيْنَ என்று கூறி உனது ரஹ்மானிய்யத்தின் வழிகளிலிருந்து விலகி நிற்கின்றவர்களின் பாதையிலிருந்தும் எங்களை பாதுகாப்பாயாக என்று துஆ செய்யும்படி போதனை தரப்பட்டுள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 199,200 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

உனது ரஹ்மானிய்யத் இன்றி நாங்கள் வழிதவறிக் கொண்டே இருப்போம். எனவே நாங்கள் வழிதவறுவதிலிருந்து நீ எங்களை காப்பாற்றுவாயாக. எனவே சூரா ஃபாத்திஹாவை நாம் இந்த அடிப்படையில் சிந்தித்து இவ்வாறு துஆ செய்ய வேண்டும்.

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆவில் காரணிகளை பயன்படுத்துவது அவசியம் ஆகும் என்பதை எடுத்துரைத்தவாறு மேலும் கூறுகின்றார்கள்:

கேளுங்கள்! اُدْعُوْنِيْٓ اَسْتَجِبْ لَكُمْ என்று எந்த துஆவைக் குறித்து இறைவன் கூறியுள்ளானோ அதற்கு ஓர் உண்மையான ஆன்மாவின் தேட்டம் உள்ளது. அழுகை மற்றும் மண்றாடுதலில் உண்மையான ஆன்மா இல்லையென்றால் பின்னர் அது வீணானதாகும். அந்நிலையில் காரணிகளின் அவசியம் இல்லை என்று ஒருவர் கூற முடியும். இதுவொரு தவறான புரிதலாகும். ஷரீஅத் காரணிகளை தடை செய்யவில்லை. உண்மையாக கேட்டீர்கள் என்றால், துஆ ஒரு காரணி இல்லையா? அல்லது காரணிகளுக்கான துஆ இல்லையா?

காரணிகளை தேடுவதற்கு துஆவே ஒரு காரணியாகும். துஆ சுயமே மகத்துவமிக்க காரணியின் ஊற்றாக உள்ளது. மனிதனின் வெளிப்படையான அமைப்பும் அவனது இரண்டு கரங்களும் இரண்டு பாதங்களும் ஒன்று மற்றொன்றிக்கு உதவி செய்வதற்கு இயற்கையின் ஒரு வழிகாட்டலாக உள்ளது. ஆக இந்த காட்சி சுயம் மனிதனிடமே இருக்கின்றபோது பின்னர் எந்த அளவிற்கு இதில் ஆச்சரியமும் ஏற்படுகின்றதென்றால் அவன் تَعَاوَنُوْا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى (நன்மையிலும் இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்) என்பதன் பொருளை புரிவதில் கஷ்டத்தை உணர்கின்றான்.

ஆயினும் நான் கூறுகின்றேன். காரணிகளை துஆவின் மூலமாகவே தேடுங்கள். நான் உங்களது உடலிற்குள் அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்ட ஒரு தொடர் மற்றும் ஒரு முழுமையான அமைப்பை பார்க்கின்றேன். ஆனால் நீங்கள் அதனை நிராகரிக்கின்றீர்கள். அல்லாஹ் காரணிகளை இன்னும் தெளிவாக்குவதற்காகவும், விளக்குவதற்காகவும் உலகிற்கு தெளிவுபடுத்துவதற்காகவும் நபிமார்களின் ஒரு தொடரை உலகில் நிலைநாட்டியுள்ளான். அல்லாஹ் இந்த விஷயத்திற்கு வல்லமை படைத்தவனாக இருக்கின்றான். அதாவது அவன் விரும்பினால் அவன் இந்த நபிமார்களின் தேவைகளையும் அல்லது (அவர்களுக்கு) எந்த வகையான உதவிக்கான அவசியத்தையும் எஞ்சியிருக்கச் செய்திருக்க மாட்டான். ஒரு நேரம் அவர்களுக்கு இவ்வாறு வருகின்றது. அதாவது அவர்கள் مَنْ اَنْصَارِيْٓ اِلَى اللّٰهِ (அல்லாஹ்வுக்காக எனது உதவியாளர் யார்?) என்று கூறும் நிர்பந்தத்திற்கு உள்ளாகி விடுகின்றனர். அவர்கள் ஒரு பரிதவித்த யாசிப்பவரைப் போன்று குரல் கொடுக்கின்றார்களா? இல்லையா?

مَنْ اَنْصَارِيْٓ اِلَى اللّٰهِ என்று கூறுவதும் கூட ஓர் அடையாளமாக உள்ளது. அவர்கள் உலகிற்கு காரணிகளை பயன்படுத்துவதை கற்றுக் கொடுக்க விரும்புகின்றார்கள். உலகின் பொருட்களை பயன்படுத்துவதும் அவசியமாகும். அது துஆவின் ஒரு துறையாகும். ஏனென்றால் அல்லாஹ்வின் மீது அவர்களுக்கு நம்பிக்கையும், அவனது வாக்குறுதியின் மீது முழுமையான நம்பிக்கையும் உள்ளது. அவர்கள் நன்கு அறிந்துள்ளனர். அல்லாஹ் அவர்களிடம்

اِنَّا لَنَنْصُرُ رُسُلَنَا وَالَّذِيْنَ اٰمَنُوْا فِي الْحَيٰوةِ الدُّنْيَا

(நாம் எமது தூதர்களுக்கும், அவர்கள் மீது நம்பிக்கை கொள்பவர்களுக்கும் இவ்வுலகில் நிச்சயமாக உதவி செய்வோம்) என்று வாக்குறுதி செய்திருக்கின்றான்.

இது ஓர் உறுதியான, நிச்சயமான வாக்குறுதியாகும். ஒருவரின் உள்ளத்தில் அல்லாஹ் உதவிக்கான எண்ணத்தை ஏற்படுத்தாவிட்டால் ஒருவரால் எவ்வாறு உதவி செய்ய முடியும்? என்று நான் கேட்கின்றேன்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 168,169 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

எனவே நபிமார்களுக்கும் கூட காரணிகளின் தேவை உள்ளது. ஆயினும் அவர்கள் அல்லாஹ்வுக்கு முன்னால் குனிகின்றனர். பின்னர் அல்லாஹ்வே அவர்களுக்கு காரணிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றான். மக்களின் உள்ளங்களில் எண்ணங்களை ஏற்படுத்துகின்றான். வலிமை வாய்ந்த உதவியாளர்களை அவர்களுக்கு வழங்குகின்றான். அவர்கள் அவர்களின் பணிகளை முன்னெடுத்துச் செல்லக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

துஆவின் அடிப்படையில் தொழுகையின் நோக்கம் மற்றும் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தொழுகையின் அசல் நோக்கமும், சாறும் துஆவே ஆகும். துஆ கேட்பது என்பது அல்லாஹ்வின் இயற்கைச் சட்டத்திற்கு ஏற்புடையதாகவே உள்ளது. உதாரணமாக, பொதுவாக நாம் பார்க்கின்றோம். குழந்தை அழுது புலம்புகின்றது. வேதனையை வெளிப்படுத்துகின்றது. அந்நிலையில் தாய் எந்த அளவிற்கு நிம்மதியிழந்து அதற்கு பாலூட்டுகின்றாள். இறைவனுக்கும், அடியாருக்கும் இடையில் இதுபோன்ற ஒரு தொடர்பு உள்ளது. அதனை அனைவராலும் புரிந்து கொள்ள முடியாது.

மனிதன் அல்லாஹ்வின் வாசலில் வீழ்ந்து மிகவும் உருக்கத்துடனும், பணிவுடனும் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் தனது நிலைகளை எடுத்துரைத்து அவனிடத்தில் தனது தேவைகளை வேண்டுகின்றபோது இறைவனின் கருணை பொங்கி எழுகின்றது. மேலும் அதுபோன்ற நபர் மீது கருணை செய்யப்படுகிறது. அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணை எனும் பால் ஒரு மன்றாடுதலை வேண்டுகிறது. எனவே அவனது சன்னிதானத்தில் அழுகின்ற கண்களை முன் வைக்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 352 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வுக்கு முன்னால் அழுது, புலம்புவதால் எதுவும் கிடைக்காது என்று சில மக்கள் கருதுகின்றனர். இந்த விஷயம் முற்றிலும் தவறானதாகும். மேலும் பொய்யாகும். அதுபோன்ற நபர்கள் அல்லாஹ்வின் இருப்பு, அவனது பண்பு, வல்லமை மற்றும் ஆதிக்கத்தின் மீது நம்பிக்கை கொள்வதில்லை. அவர்களிடத்தில் உண்மையான ஈமான் இருக்குமென்றால் இவ்வாறு கூறுவதற்கு அவர்கள் தைரியம் கொள்ள மாட்டார்கள். அல்லாஹ்விடத்தில் ஒரு நபர் உண்மையான

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 20 May 2021 Issue No. 20

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

தவ்பா செய்து முகம் திருப்பும்போது அல்லாஹ் அத்தகைய நபர் மீது எப்போதும் தனது அருளை பொழிந்துள்ளான். ஒருவர் எவ்வளவு சரியாக கூறுகின்றார்:

عاشق کہ شد کہ یار بحالش نظر نہ کرد اے خواجہ! درد نیست وگرنہ طبیب ہست“

பொருள்: தன்மீது அன்பு கொண்ட நபரின் மீது பார்வை செலுத்தாத அன்பர் யார் இருக்கின்றார்? அன்பரே! மனிதனிடத்தில் வலி இல்லை. (ஆனால்) மருத்துவர் (தயாராக) இருக்கின்றார்.

இறைவன் இதனையே விரும்புகின்றான். அதாவது நீங்கள் அவனது சன்னிதானத்தில் தூய்மையான உள்ளத்துடன் வர வேண்டும். மேலும் அதற்கேற்ப உங்களை நீங்கள் ஆக்கிக் கொள்ள வேண்டும். இது மட்டுமே நிபந்தனை ஆகும். இறைவனின் சன்னிதானத்திற்கு செல்வதற்கு தகுதியாக்குகின்ற உண்மையான மாறுதல்களை நீங்கள் உங்களிடத்தில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நான் உங்களிடம் மெய்யாகவே கூறுகின்றேன். இறைவனிடத்தில் விநோதமான வல்லமைகள் உள்ளன. அவனிடத்தில் எல்லையற்ற அருட்களும், பரக்கத்துகளும் உள்ளன. ஆனால் அதனைப் பார்ப்பதற்கும், பெறுவதற்கும் அன்பின் கண்களை நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். உண்மையான அன்பு இருக்குமென்றால் இறைவன் அதிகமான துஆக்களை கேட்கின்றான். மேலும் உதவிகளும் செய்கின்றான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 352, 353 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: நம்பிக்கையாளர்களை பாராட்டியவாறு அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

يَذْكُرُوْنَ اللّٰهَ قِيٰمًا وَّ قُعُوْدًا وَّعَلٰى جُنُوْبِهِمْ وَيَتَفَكَّرُوْنَ فِيْ خَلْقِ السَّمٰوٰتِ
وَالْاَرْضِ رَبَّنَا مَا خَلَقْتَ هٰذَا بَاطِلًا

அதாவது நம்பிக்கையாளர்கள் யாரென்றால் அவர்கள் இறைவனை நின்று கொண்டும், அமர்ந்து கொண்டும், தமது படுக்கைகளில் படுத்துக் கொண்டும் இறைவனை நினைவு கூருகின்றனர். மேலும் பூமி மற்றும் வானங்களிலுள்ள விநோதமான படைப்புகளை அவர்கள் சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்கின்றனர். அவர்களிடத்தில் இறைப் படைப்பின் அந்த நுட்பங்கள் வெளிப்படுகின்றபோது, இறைவா! நீ இதனை வீணாக படைக்கவில்லை என்று கூறுகின்றனர். அதாவது உண்மையான நம்பிக்கையாளர்கள் படைப்பின் அடையாளங்களையும், அதன் தன்மைகளையும் கண்டறிந்த பிறகு உலகவாதிகளைப் போன்று பூமியின் வடிவம் இவ்வாறு இருக்கின்றது. அதன் பரப்பளவு இவ்வாறு இருக்கின்றது. அதில் ஈர்ப்புத்தன்மை உள்ளது. சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களுடன் இந்த அளவுக்கு தொடர்புகள் உள்ளன என்று கூறுவதோடு மட்டும் அவர்கள் நின்று விடுவதில்லை. மாறாக, அந்தப் படைப்பின் சிறப்புகளை அவர்கள் அடையாளங்கண்டு கொண்ட பிறகு அந்த சிறப்புகள் வெளிப்படுவதற்கு பின்னால் உள்ள அந்த இறைவனின் பக்கம் அவர்கள் முகம் திருப்புகின்றனர். மேலும் தமது ஈமானை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்கின்றனர்.

(சுர்மா செஷ்மா ஆரியா, ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 191,192)

அதாவது அறிவைப் பெற்ற பிறகு இறைவனின் பக்கம் குனிகின்றனர். நான் ஏற்கனவே கூறியதுபோன்று தனது ஈமானை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். இதுவே ஒரு நம்பிக்கையாளரின் சிறப்பான அடையாளமும், தனித்தன்மையும் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு வழங்கிய மகத்துவமிக்க கருவூலத்திலிருந்து சில விஷயங்களை நான் எடுத்து வைத்துள்ளேன். இதில் நமக்கு துஆவின் முக்கியத்துவம், அதன் நுட்பம், துஆ கேட்பதற்கான வழிமுறை, அதன் தத்துவம் ஆகிய அனைத்தின் மீதும் ஒளிபாய்ச்சப்பட்டுள்ளது. நாம் இதனை புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருந்தால் நம்மால் நமது வாழ்க்கையில் ஒரு புரட்சியை ஏற்படுத்த முடியும். இறைவனுடனான தொடர்பில் ஒரு சிறப்பான தன்மையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அல்லாஹ்வின் அருளை ஈர்க்கக்கூடியவர்களாக ஆக முடியும்.

நாம் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்கு அவனது கட்டளைகளின்படி நடப்பவர்களாக திகழ்வதற்கு இந்த ரமலானில் நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் நமது ஈமானை உறுதிப்படுத்திக் கொண்டே செல்ல வேண்டும். நாம் துஆவின் நுட்பத்தையும், அதன் தத்துவத்தையும் புரியக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நமது செயல்களில் சீர்திருத்தத்தை செய்யக்கூடியவர்களாக நாம் ஆகிவிட வேண்டும். அல்லாஹ்வின் சன்னிதானத்தில் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்ற மக்களைச் சார்ந்தவர்களாக நாம் ஆகிவிட வேண்டும். இந்த ரமலான் அல்லாஹ்வுடனான தொடர்பிலும், ஆன்மீக நிலையிலும் நம்மிடத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக் கூடியதாக அமையட்டுமாக.

உங்களது சகோதரர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். நான் இதற்கு முன்பும் துஆ செய்யும்படி அறிவுறுத்தியுள்ளேன். பாகிஸ்தானில் அல்லது அல்ஜீரியாவில் அல்லது எந்தவொரு இடத்திலும் ஏதாவதொரு வகையில் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ள சகோதரர்களுக்காக குறிப்பாக ஜமாஅத்தின் கஷ்டங்களில் சிக்கியுள்ள சகோதரர்களுக்காக துஆ செய்யும்படி கூறியுள்ளேன்.

பாகிஸ்தானில் தினமும் ஏதாவதொரு சம்பவம் நிகழ்கின்றது. அங்கு அஹ்மதிகளுக்கு ஏதாவதொரு வடிவில் துன்பம் தரப்படுகின்றது. எனவே குறிப்பாக அவர்களுக்காக துஆ செய்ய வேண்டும். அதேபோன்று அல்ஜீரியாவிலும் அவர்களது வழக்குகளை மீண்டும் தொடங்குவதற்கு எண்ணங்கள் உள்ளன. அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக.

மற்றவர்களுக்காக துஆ செய்வதன் மூலம் நமது துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. இந்த வழிமுறையை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். இன்னும் கூறப்போனால், மற்றவர்களுக்காக துஆ செய்யக் கூடியவர்களுக்காக வானவர்களும் துஆ செய்கின்றனர். வானவர்கள் துஆ செய்கின்றார்கள் என்றால் அது எந்த அளவிற்கு நன்மை பயக்கும் வணிகமாகும். எனவே நாம் குறிப்பாக நமக்காக மட்டுமல்லாமல் மற்றவர்களுக்காகவும் மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும். இந்த ரமலானில் அல்லாஹ் நமக்கு இதற்கும் சிறப்பான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

(தமிழில்: மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

.....☆.....☆.....☆.....

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad